விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி


பக்கங்கள்:பதினெட்டு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 23 புதன்கிழமை (08.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து





ஜன சமுத்திரத்தில் அசைந்து 'செல்லும் நல்லூர்க் கந்தனின் தேர்...

# 18ஆவது சட்டத்திருத்தத்துக்கு உயர் நீதிமன்றம் பச்சைக் கொடி

## சட்டப்பிரேரணை இன்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பில் செய்யப்படவுள்ள திருத்தத்துக்கு பொது வாக்கெடுப்பு தேவையில்லை என்று இலங்கை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. இதன் மூலம் அந்த திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கு உயர் நீதிமன்றம் வழி செய்துள்ளது.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் சாமல் ராஜபக்ஷ இதனை நேற்று அறிவித்தார். (18ஆம் பக்கம் பார்க்க)

## இலட்சக்கணக்கான மக்கள் அலைமோத நல்லூரான் நேற்று தேரில் வலம் வந்தான்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழாவில் நேற்று இலட்சக் கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் யாழ்ப்பாணத்துக்கு வந்தவர்கள் என இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

நல்லைக் கந்தனுக்கு காலை 6.00 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம் பெற்று 7.00 மணியளவில் ஆறுமுகப்பெருமான் தேரில் ஆரோகணித்தார்.

அரோகரா ஓசையுடன் ஜன சமுத்திரத்தின் மத்தியில் தேர் அசைந்து சுமார் 2 மணித்தியாலத்தில் இருப்பிடத்துக்கு சென்றது.

வழமையாக ஒரு மணித்தியாலத்துக்குள் தேர் இருப்பிடத்துக்கு வந்து சேருகின்றமை குறிப்பிடத்தக்கது. (18ஆம் பக்கம் பார்க்க)

# வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றம் உடனடிச் சாத்தியமில்லை

## யாழ். கட்டளைத் தளபதி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பிர தேசத்தில் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கை உடனடியாக சாத்தியமற்றது என யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துரு சிங்க தெரிவித்தார்.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் மக்களை மீள்குடியேற்றுவதற்கு பாதுகாப்பு அனுமதி தேவையெனவும் அது வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் மக்கள் விரைவில் மீள்குடியேற்றப்படுவர் என கடந்த ஜனவரி மாதம் முதல் அரசாங்கமும் படைத்தரப்பும் கூறிவரும் நிலையில் இது வரை எதுவித மீள்குடியேற்ற நட (18ஆம் பக்கம் பார்க்க)



## அவசரகாலச் சட்டம் வாக்கெடுப்பின்றி நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. வாக்கெடுப்பின்றியே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருக்காத மையே இதற்குக் காரணம்.

இதேவேளை முடியுமென்றால் அவசரகாலச் சட்டத்தை நீடிக்காது நாட்டை ஆட்சி செய்யுமாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அரசாங்கத்திடம் சவால் விடுத்துள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)

union assurance
Trust in your tomorrow, today.
வேலை வாய்ப்பு
A/Lபரீட்சைக்கு தற்போது தோற்றிய இளைஞர் யுவதிகளே!
வேலைவாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களே!
"சிந்தியுங்கள் செயற்படுங்கள்"
தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும்இருந்தால் வாழ்க்கையில்சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை
AFTER A/L WHAT NEXT?
தவறவிடாதீர்கள் யூனியன் அஷ்யூரன்ஸ் நேர்முகத் தேர்வை! நாளை யூனியன் அஷ்யூரன்ஸில் நேர்முகத் தேர்வு
"நேற்றைய பத்திரிகைகளில்"
காலம் :- வியாழக்கிழமை 09.09.2010 நேரம் :- மு.ப. 09.00 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ் 139, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : விற்பனை முகாமையாளர்
G.சிறீவரதன் 0773422718
(C-1025)

## சாட்டி மாதா பெருவிழாவுக்கு வியாபார அனுமதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தின் தல பெருவிழா நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

இத் திருவிழாக் காலத்தில் இங்கு வியாபாரம் செய்ய விரும்புபவர்கள் தமது பதிவுகளை முன்கூட்டியே வேலணை பிரதேச சபையில் மேற்கொள்ளுமாறு வேலணை பிரதேச சபையின் செயலாளர் கெ.தவராஜா கேட்டுக் கொள்கின்றார். (ச)

## பி அன் எஸ்ஸின் இசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை பிரபல பாடகர்கள் பாத்தியா மற்றும் சந்தோஷ் கலந்து கொள்ளும் இசை நிகழ்ச்சி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

இவ் இசை நிகழ்ச்சியில் பாத்தியா மற்றும் சந்தோஷுடன் அசாந்தி டி அல்விஸ், ரன்திர் விதான, உமாரா சிங்கவன்ச ஆகியோருடன்

தமிழ்ப் பாடகர்களான எம்.சிவகுமார், நிலுக்ஷி, ஜோர்ச் டான்சி, மொறின் ஜெனட், நவகம்புர கணேஷ், றீனா, சிரஞ்சீவி, ராஜ் பிரதாபன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (ச-5)

## தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் பணியாற்றிய பெண்ணுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டு வந்த தொலைக்காட்சி சேவையில் பணியாற்றிய சர்மிளா நாகமுத்து என்ற பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் இவரைத் தடுத்து வைத்து விசாரணை செய்த புலனாய்வுப் பிரிவினர் அவரை நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ரஸ்மி சிங்கப்புலி உத்தரவிட்டார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் பின்னர் கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் வவுனியாவிலுள்ள முகாம் ஒன்றில் இருந்த போது சர்மிளா கைது செய்யப்பட்டதாகப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சந்தேக நபர் விடுதலைப்புலிகளால் ஒளிபரப்புப்பட்டு வந்த தமிழீழ தேசியக் தொலைக்காட்சியில் அறிவிப்பாளரான இவரிடம் விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர். (ச-5)

## மொழிபெயர்ப்பாளர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய வடிவமைப்பு நிறுவனத்தால் நடத்தப்படவிருக்கும் பயிற்சி நெறிக்குச் சிங்கள-தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இத் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் மேலதிக தகவல்களுக்கு 021 222 2421 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பதில் பிரதிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (ச-4)

## ம.உ. ஆணைக்குழுவின் தலையீட்டால் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவி

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பு நிராகரிக்கப்பட்ட மாணவி ஒருவர் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டால் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் 2009 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி மாவட்டமட்டத்தில் 6-வது இடத்தைப் பெற்றார்.

அம் மாணவி தனக்குப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் பிரிவில் மேற்படிப்பை மேற்கொள்ள அனுமதி கிடைக்கும் என எதிர்பார்த்து இருந்தபோதும் அவ் அனுமதி கிடைக்கவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் சென். ஜோசப் கல்லூரியில் படித்த மாணவன் ஒருவருக்கே அந்த அனுமதி கிடைத்துள்ளது.

தாம் பரீட்சைக்கு முன்பாக மூன்று வருடங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு மத்திய மகா வித்தியாலயத்தில் படித்ததாகப் பொய் கூறி அந்தப் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பைத் தான் பெற்றுக் கொண்டார்.

இதனால் மேற்படி மாணவிக்குப் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பு நிராகரிக்கப்பட்டது.

இது தொடர்பில் குறித்த மாணவி மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்டதன் காரணமாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவ பீடத்தில் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டார்.

இவர் இன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமது படிப்பிற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளவுள்ளார். (ச-5)

## 18-வது அரசியல் திருத்தத்திற்கு எதிராக சட்டத்தரணிகள் சவப்பெட்டிப் பேரணி

18-வது அரசியல் திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்தரணிகள் நேற்று சவப்பெட்டி ஊர்வலம் மற்றும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு முன்னால் நேற்று நண்பகல் நடைபெற்ற ஆர்ப்பாட்ட மற்றும் ஊர்வலப் பேரணியில் தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஜனநாயகம் உயிரிழந்து விட்டது என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 18-வது அரசியல் திருத்தத்தினால் ஜனநாயகம் உயிரிழந்து விட்டது என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சவப்பெட்டியைத் தாங்கிய சட்டத்தரணிகள் ஊர்வலமாகச் சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

18-வது திருத்தத்தைச் சமர்ப்பிக்கும் இன்றைய தினத்தைக் கறுப்பு தினமாகக் கருதிக் கறுப்புத் துணியால் தமது வாய்களைக் கடியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது சட்டத்தரணிகள் சவப்பெட்டியைத் தோளில் சுமந்து சென்று உயர் நீதிமன்ற வீதிகளைச் சுற்றி வந்த பின்னர் உயர் நீதிமன்றத்துக்கு அருகில் இருக்கும் பூங்காவில் வைத்து எரியூட்டினர்.

அதேவேளை 18-வது திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றக் கட்டடத்திற்கு வெளியில் சத்தியாக்கிரக போராட்டத்தில் குதித்துள்ளனர்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட சபை அமர்வுகள் பத்து நிமிட நேரம் ஒத்திவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சாட்டி சிந்தாத்திரை மாதா திருவிழா நாளை ஆரம்பம்

(வேலணை)

சாட்டி புனித சிந்தாத்திரை மாதா திருவிழா நாளை வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு முதல்நாள் திருப்பலியுடன் ஆரம்பமாகும். தினமும் காலை 7மணிக்கு திருநாள் திருப்பலியும் நவநாள் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 11, 12, 13 மற்றும் 15, 16, 17 ஆகிய தினங்களில் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் சிறப்புக் கருத்தமர்வுகளும் நடைபெறும். (ச)

## அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு சிறிரங்காவுடன் மேலும் இருவர் ஆதரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா, ஹம்பகா மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் உபேக்ஸா சுவர்ணமாலியும் ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் அரசுடன் இணைந்து கொள்வதாக அறிவித்துள்ளனர்.

பிரபல தொலைக்காட்சி நடிகையும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஹம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான உபேக்ஸா சுவர்ணமாலி ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் பபா என்ற ஜனரஞ்சக தொலைக்காட்சி நாடகத்தின் கதாநாயகியாக இவர் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அரசாங்கத்தின் 18-வது அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாக குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் விஜயசிங்க அறிவித்துள்ளார்.

இந் நிலையில் அரசாங்கத்தின் 18-வது அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்திற்கு இதுவரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புலிகளின் பகுதியிலிருந்து 200 கிலோ தங்கம் மீட்பு

### நடந்தது என்ன? பொன்சேகா கேள்வி



தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 200 கிலோக்கிராம் எடையுடைய தங்கம் மீட்கப்பட்டுள்ளதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவசர காலச் சட்டம் தொடர்பான வாக்கெடுப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, யுத்தம் நடைபெற்ற இறுதி 4 ஆண்டு காலப் பகுதியில் வெள்ளமுள்ளி வாய்க்கால் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கைகளின் போது 200 கிலோக்கிராம் எடையுடைய தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

தம்மைப் பதவியிலிருந்து நீக்கியதன் பின்னர் மேலும் பெருந்தொகை தங்கம் மீட்கப்பட்ட போதிலும் அவற்றுக்கு என்ன நேர்ந்தது என்பது வெளிப்படையாகவில்லை.

குமரன் பத்மநாதனுக்குச் சொந்தமான பெருந்தொகை சொத்துக்களுக்கு என்ன நேர்ந்தது என்பது இதுவரையில் வெளிப்படையாகவில்லை.

தாமும் பாதுகாப்புச் செயலாளரும் ஒரே விதமான சிந்தனையுடையவர்கள் என குமரன் பத்மநாதன் அண்மையில் அளித்த செவ்வி ஒன்றில் குறிப்பிட்டுள்ளதாகவும் இது குறித்து அனைவரும் சிந்திக்க வேண்டும் எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் குமரன் பத்மநாதன் இதே கருத்தை வெளியிட்டிருந்தால் 5 ஆயிரம் படை வீரர்களின் உயிர்களைப் பாதுகாத்திருக்கலாம்.

யுத்தத்தின் போது பாரியளவிலான ஒத்துழைப்புக்களை வழங்கிய கருணா, பிள்ளையான் போன்றவர்கள் பின்தள்ளப்பட்டுக் குமரன் பத்மநாதனுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## தேசிய நல்லிணக்க ஆணைக்குழு அடுத்த மாதம் யாழ். வருகை

### சாட்சியங்களைப் பதிவு செய்ய

தேசிய நல்லிணக்க ஆணைக்குழு அடுத்த மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தனது சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளது.

தேசிய நல்லிணக்க ஆணைக்குழு அதன் செயற்பாட்டை இன்னும் இரு மாதங்களுக்கு நீடித்துள்ளது.

இவ் ஆணைக்குழு கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குச் சென்று எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 19 ஆம்திகதி வரை அமர்வுகளை நடத்தவுள்ளது.

அத்துடன் அடுத்த மாதம் 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை அமர்வுகளை யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

இவர்கள் வவுனியா மற்றும் திருகோணமலை உட்பட பல்வேறு இடங்களில் தமது சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

### விஞ்ஞான பாட முன்னோடிப் பரீட்சை

யாழ்.மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான தேசிய மட்ட விஞ்ஞானப் பட முன்னோடிப் பரீட்சை நாளை வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. இதேவேளை கணிதபாடப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் 16 ஆம் திகதி வியாழக்கிழமையும் காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-2)



# இன்று ஒரு தகவல்

## பார்னம் உத்தி (Barnum Effect)

திரைப்படத் தயாரிப்பாளரான எனது நண்பர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

"நீங்கள் எடுக்கும் எந்தப் படமும் கையைக் கடிக்காத அளவுக்கு எடுத்து விடுகிறீர்களே... அது எப்படி?'' என்று கேட்டேன்.

" அது ஒன்றும் பெரிய விடயமல்ல. பெண்களுக்கென்று சில உருக்கமான காட்சிகள், இளைஞர்களுக்கென்று கவர்ச்சி நடனங்கள், அடிதடிக்காட்சிகள், வயதானவர்களுக்கென்று சில ஆன்மீகக் காட்சிகள் , சிறுவர்களுக்கு சிரிப்பு என்று எல்லாம் சேர்த்து நான் படம் எடுக்கிறேன். மசாலாப்படம். இது பெரிதாக ஓடவில்லையென்றாலும் சுமாராக ஓடிவிடும்'' என்றார்.

இது ஒது உத்தி.

இதற்குப் பெயர் பார்னம் உத்தி.

அது என்ன பார்னம் உத்தி?

பீனியஸ் பார்னம் என்று ஒருத்தர் அமெரிக்காவில் இருந்தார்.

19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் கொடிகட்டிப் பறந்த ஒரு சர்க்கஸ் நிறுவன அதிபர் அவர்.

''இந்த உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஓர் ஏமாளி பிறந்து கொண்டே இருக்கிறான்'' என்பது அவருடைய கருத்து.

ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்தும் அம்சங்களைக் கொஞ்சம் கொஞ்சம் கலந்து கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தியதே அவருடைய இந்த வெற்றிக்குக் காரணம்.

அதனால் இந்த உத்தியை யார் கடைப்பிடித்தாலும் அதற்குப் பார்னம் உத்தி என்று பெயர் வந்துவிட்டது.

ஜோதிடம் பார்ப்பவர்களுக்கு இந்த உத்திதான் மிகவும் உதவியாக இருக்கும்.

ஒரு விடயத்தை ஒருவருடைய கோள் நிலைகள் அல்லது கையெழுத்து நிரூபிப்பதாக அவரிடம் சொன்னால் அதை அவர் நம்பிவிடுவார்.

ஆனால் அந்த விடயம் நல்லதாக இருக்க வேண்டும். நேர்மறையானதாக இருக்க வேண்டும்.(Positive )

"எட்டாமிடத்தில் குரு, ஒன்பதாம் இடத்தில் சனி இருக்கிறது நீங்க ஒரு பெரிய மேதையாகத் தான் இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். கேட்பவருக்கு அதை மறுக்க மனம் வராது. அப்படிச் சொல்லும் போது கூடவே,

"என்ன, கொஞ்சம் முன் கோபம் அதிகம். ஆனாலும் அது உடனே மறைந்து விடும்.'' என்று சில அற்ப விடயங்களைச் சொன்னாலும் அதையும் அவர் சரிதான் என்று சொல்லி ஒப்புக் கொள்வார்.

ஆளுமையை எடைபோடும், ஒரு நிறுவப்பட்ட உத்தியின் மூலமாக தன்னுடைய குணாதிசயங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக அவர் நம்புவது தான் இதற்குக் காரணம்.

இந்தமாதம் பணத்தட்டுப்பாடு கொஞ்சம் இருக்கும்.

உடம்பில் ஏதாவது கொஞ்சம் அசௌகரியம் இருக்கும்.

வீட்டுக்குள் இலேசான மனஸ்தாபம் வரலாம்.

இது மாதிரி பொதுப்படையாக சிலதைச் சொன்னாலே போதும். மக்களை நம்பவைத்து விடலாம்.

இதெல்லாம் நமக்கு மட்டும் தான் ஏற்படுகிறது என்று அவர்கள் நினைப்பது தான் காரணம்.

இதுதான் பார்னம் உத்தி.

மனிதர்கள் பாராட்டுக்களை விரும்புவதும் விமர்சனங்களை வெறுப்பதும் பார்னம் உத்தியின் அடுத்த கூறு.

அதனால் ஒருத்தனுக்கு ஜோதிடம் சொன்னாலும் சரி, அவருடைய ஆளுமையை மதிப்பிடுவதாக இருந்தலும் சரி, அவரைப் புகழும் படி இருக்க வேண்டும். அப்பொழுது தான் சரியாக இருக்கும்.

சாதகமான விடயங்களை அதிகமாகவும் பாதகமான விடயங்களை நாசூக்காகவும் சொன்னால் மக்கள் நம்பிவிடுவார்கள். ஒருத்தரை கருமி என்று சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

அதையே கொஞ்சம் மாற்றி 'சிக்கனமானவர்' என்று சொன்னால் ' நீங்கள் சொல்வது சரிதான்' என்று சொல்வார்.

''நீங்கள் பெரியசெலவாளி தான். ஆனாலும் நல்ல விடயங்களுக்குத் தான் செலவளிப்பீர்கள்'' என்று சொல்ல வேண்டும். இப்படி இந்த பார்னம் உத்தியைக் கடைப்பிடித்து இன்றைக்கு வெற்றிகரமாக காலம் தள்ளுபவர்கள் பலர் இருக்கிறார்கள்.

இந்த உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஒரு ஏமாளி பிறந்து கொண்டே இருக்கிறான் என்பது பீனியஸ் பார்னம் அவர்களுடைய நம்பிக்கை என்று சொன்னோம் இல்லையா?

அதைவிட அடுத்தவர்களை ஏமாளியாக நினைக்கும் மனதர்கள் தான் இன்றைய உலகத்தில் அதிகம்.

ஒருத்தர் தனது மேலதிகாரியிடம் போய்...

" ஐயா, ஒரு நாள் லீவு வேண்டும். என்னுடைய தங்கச்சிக்குக் கல்யாணம்'' என்றார்.

அவர் பார்த்தார். 'ஒரு பத்து நிமிடம் வெளியில் இருங்கள்''என்றார்.

பத்துநிமிடம் கழித்துக் கூப்பிட்டார்.

'இதோ பாருங்க... நீங்கள் சொல்வது பொய். இப்பொழுது உங்களுடைய தங்கச்சிக்கு போன் பண்ணினேன். அவள் தனக்கு 2 வருடத்துக்கு முன்பே திருமணமாகி விட்டதாக சொன்னாள்'' என்றார்.

உடனே இவர்,

'' சேர், நீங்கள் சொல்வதும் பொய்யாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் ,நிஜமாக எனக்கு ஒரு தங்கச்சியே கிடையாது'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரச அனுமதி

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கான யோசனைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

திறைசேரி அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பொது இதற்கான அனுமதி பெறப்பட்டதாகப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் பேச்சாளரும் ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளருமான சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.

அதன் பிரகாரம் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்படவிருந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கையைத் தற்காலிகமாக இடை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் உத்தேச சம்பள உயர்வைப் பெற்றுத் தருவதாக இணக்கம் தெரிவித்துள்ளதென விரிவுரையாளர்கள் தெரிவித்தனர்.

எனினும் சம்பளம் உயர்த்தப்படும் வரையில் விரிவுரையாளர் சங்கம் அவதானத்துடன் இருக்குமென சம்பத் அமரதுங்க மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் வருடாந்த மஹோற்சவம்

(மருதங்கேணி)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாட்கள் திருவிழா நடைபெறும்.

இதில் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை வெண்ணெய் திருவிழாவும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மஹாஹம்சன் போரும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திரு விழாவும் மறுநாள் வியாழக்கிழமை சமுர்த்திரத் தீர்த்தமும்இடம்பெறும். (ஸ்ரீ-2-35)

## அதிபர் பதவிக்கான வெற்றிடம் நிரப்புதல்

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலயத்திற்குட்பட்ட யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடத்திற்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம் என்றும் இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

08.09.2010
(ஆவணி 23, புதன் கிழமை)
அமாவாசை பிற்பகல் 4.39 மணி வரை
பூசம் பின்னிரவு 1.46 மணி வரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை
நல்லூக்கந்தன் தீர்த்தம், அமாவாசை விரதம்

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும், பிள்ளைகள் வழியில் சில நன்மைகள் வந்து சேரலாம்.

**இடபம்** வாகனயோகம் உருவாகும், தாய்வழி உறவினர்கள் மூலம் அனுகூலம் கிடைக்கும், வீட்டில் விருந்தினர்கள் வருகை அதிகரிக்கும், தொலைபேசித் தகவல் சந்தோசத்தைத் தரும்.

**மிதுனம்** சுபநிகழ்வுகளில் புதியவர்கள் சந் ] 0 A, இழுபறியாக இருந்த காரியம் நிறைவேறும், சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடக்கலாம், உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து சேரும்.

**சிங்கம்** நண்பர்கள் மனம்விட்டு பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், கற்பனை மிகுதி, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் ,விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், வெளியூர் பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் ஏற்படலாம்.

**துலாம்** எதிர்கால வெற்றிக்கு திருப்புமுனையான நாள், அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர், தொழில் வளர்ச்சியுண்டு, தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.

**விருச்சிகம்** அந்நியர்களின் சந்திப்பால் அனுகூலம் கிடைக்கும்,தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவாகலாம்,பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** அரைகுறையாக இருந்த வேலைகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், கணவன்-மனைவியிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும், பயணம் பயன் தரும்.

**மகரம்** சிலர் பாராட்டுவதுபோல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கலாம், அலைச்சல் அதிகரிக்கும், தேகநலனில் அக்கறை தேவை.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், இல்லத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் வாய்ப்புண்டு, சுபநிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டும் நாள், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் ஏற்படும், விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

வளவன்

# பேசும் படம்



யுத்தம் தந்த அழிவிலிருந்து மீள... காட்சி-கிளிநொச்சி

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 |
| கோவா | 70 | 80 |
| கரட் | 60 | 100 |
| பூசணி | 30 | 40 |
| புடோல் | 20 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 55 | 60-70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 75 |
| பயற்றங்காய் | 20 | 60 |
| லீக்ஸ் | 120 | 110 |
| பீற்றூட் | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 70 |
| முருங்கைக்காய் | 100 | 100 |
| போஞ்சி | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 30 |

# மீள் குடியேறியவர்களுக்கு தபால் மூலம் சான்றிதழ்கள்

## பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மீள் குடியேறிவர்களுக்கு பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்களை தபால் மூலம் அனுப்பிவைக்க பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கமைய பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களைப் பெற முல்லைத் தீவு மாவட் டத்திலிருந்து 5650 விண்ணப் பங்கள் கிடைக் கப்பெற்றுள்ளதாகவும் அவற்றை இரண்டு வாரங்களுக்குள் தபால் மூலம் அனுப்பி வைக் கத் தீர்மானித்துள்ளதாகவும் பதிவாளர் நாய கம் ஈ.எம்.குணசேகர தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சும் பதிவாளர் நாயகம் திணைக் களமும் கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட் டத்தில் மீள்குடியேற்ற பிரதேசமான முள்ளி யவளைத ஒட்டுசுட்டான் பகுதிகளில் நடமாடும் சேவை நிகழ்வுகளை நடத்தின.

இதன்போது முள்ளியவளையிலிருந்து 3750 பிறப்பு, இறப்பு, விவாகச் சான் றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பமும் ஒட்டுசுட்டானிலிருந்து 1900 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளதாகவும் அதே தினங்களில் 487 விண்ணப் பங் களுக்கான சான்றிதழ்கள் உடனடியாகவே வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

## பதவி விலகல் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் பதவி விலகல் பிற்போடப் பட்டுள் ளதாக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் செ.இளங்குமரன் அறிவித்துள்ளார்.

திறைசேரிச் செயலாளருடன் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் நடத்திய சந்திப்பு சாதகமாகவுள்ளதால் பதவிவிலகல் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.பதவி விலகல் தொடர்பாக இன்று பொதுக் கூட்டம் நடைபெறவிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ச)

## மதிப்பீட்டு வினாத்தாளினை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்விவலய பாடசாலைகளுக்கான க.பொ.த. சாதாரண தரத்திற்கான விஞ்ஞான பாட முன்னோடி மதிப்பீட்டு வினாத்தாளினை உரிய பாடசாலைகள் தமது கோட்டக்கல்வி அலுவலகங்களில்இன்றுபுதன்கிழமை மதி யத்திற்குப் பின் பெற்றுக் கொள்ளுமாறு வல யக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதா கிருஸ் ணன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)


## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை களில் இருந்து தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பெரு விளையாட்டுக்கள் மற்றும் மெய் வல்லுநர் விளையாட்டுக்களில் பங்குபற்றும் வீரர்களுக்கான போக்குவரத்து தங்குமிடவசதிகள் போன்ற விடயங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று வலிகாமம் கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

எனவே அப்பாடசாலையின் பொறுப்பாசி ரியர்களை நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சமூக மளிக்குமாறு வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வல்லைச்சந்தி- மண்டான் சந்திவரை நாளைமுதல் போக்குவரத்துக்குத் தடை




(பருத்தித்துறை)

யாழ்.பருத்தித்துறை வீதியின் விஸ்த ரிப்புப் பணிகளுக்காக வல்லைச் சந்தியில் இருந்து மண்டான் சந்திவரை நாளைமுதல் மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மா னிக்கப்பட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி. சுதா கர் அறிவித்துள்ளார்.

சகல விதமான வாகனங்களும், பொது மக்களும்மறு அறிவித்தல் வரை மாற்றுப் பாதை யாக வல்லை- உடுப்பிட்டி- வல்வெட்டித் துறை வீதியையும், தொண்டைமானாறு- வல்லை- துன்னாலை வீதியையும் பயன்ப டுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள். (ச-5)

# வடமாகாண விவசாயிகளுக்கு இலவச விதை நெல் விநியோகம்

வடமாகாண விவசாயிகளுக்கு அடுத்த பெரும்போகச் செய்கை நடவடிக்கைகளுக் காக 20 இலட்சம் புசல் நெல்லை இலவச மாக விநியோகிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த வாரம் முதல் இந்த விதை நெற் தொகையைக் கட்டங்கட்டமாக விநியோகிக் கவுள்ளதாக உணவு மற்றும் விவசாய ஸ்தா பனத்தின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பிரேமலால் குருப்புஆராய்ச்சி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் மீளக் குடியேறிய விவசா யிகளுக்கு இந்த இலவச விதைநெல் பகிர்ந்தளிக் கப்படவுள்ளது.

அரசாங்கம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக விதைநெல் வழங்கப்படவுள் ளதாக உணவு மற்றும் விவசாய ஸ்தாப னத்தின் வதிவிடப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

விதை நெல் மாத்திரமன்றி கௌப்பி உள் ளிட்ட தானிய வகைகளும் செய்கை யாளர் களும் விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்கா வின் முகவர் நிறுவனம் மற்றும் நோர்வே அர சாங்கம் ஆகியன இந்தத் திட்டத்திற்கான நிதியுதவிகளை வழங்கியுள்ளதாக கலாநிதி பிரேமலால் குருப்பு ஆராய்ச்சி மேலும் கூறினார். (ஸ்ரீ)

# முன்னாள் புலி உறுப்பினர்களுக்காக வவுனியாவில் தொழில் சந்தை

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு தகுதியான தொழில் வாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் வவுனியாவில் இம்மாதம் 25, 26, 27 ஆம் திகதிகளில் தொழிற் சந்தையொன்றை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள் ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்து.

வடபகுதி இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கும் இந்த சந்தையில் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களைக் கலந்துகொள்ளுமாறு புனர்வாழ்வு நடவடிக் கைக்குப் பொறுப்பான ஆணையாளர் நாய கம் பிரிகேடியர் சுதந்த ரணசிங் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதுவரையில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள்புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வு முகாம் களில் பயிற்சி முடித்து வெளி யேறியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-2)

# சோனியா காந்திக்கு பாக்.ஜனாதிபதி வாழ்த்து

(இஸ்லாமாபாத்)

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக தொடர்ச்சியாக 4 ஆவது முறை தெரிவு செய்யப்பட்டு இருக்கும் சோனியா வுக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி வாழ்த்து தெரிவித்துள்ளார். கராச்சியில் சுற்று பய ணம் மேற்கொண்டுள்ள சர்தாரி அங்கிருந்தபடியே கடந்த 5 ஆம் திகதி மாலையில் சோனியா வை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்தினார்.

சர்தாரியின் வாழ்த்துக்கு நன்றி தெரி வித்த சோனியா வெள்ளச் சேதம் உள்ளிட்ட துக்ககரமான சம்பவங்களைப் பாகிஸ்தான் மக்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ள பாகிஸ்தான் அரசும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் என நம்புவதாக கூறினார்.

அப்போது பருவநிலை மாற்றத்தால் இத்தகைய நிலைமை ஏற்பட்டதாக சர்தாரி தெரிவித்தார். இஸ்லாமாபாத்தில் உள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி அலுவலகம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல்கள் இடம் பெற்றுள்ளன. (ஸ்ரீ-2)


## 06 ஆம் மாத நினைவலைகள்

பிறப்பு
24
06
1986



இறப்பு
15
03
2010

### அமரர் ரவீந்திரநாதன் -யசோதன் (யசோ)

தம்பி நீ எங்கேயடா போனாய்!
எம் குரல் கேட்கவில்லையா?
போய் விட்டாய் என்றார்கள்
நம்பவில்லை நாம்
எம் எண்ணத்தில் நீ என்றும் வண்ணமாய்....
உன் வதன முகமும்
ஓரச்சிரிப்பும்
எப்போதும் எம்மோடு இருக்கும்
நீ நடந்த மணல்வெளி
உன் வரவைத் தேடுகின்றது
உன் மௌன வார்த்தைக்குள்
எத்தனை அர்த்தங்கள்
அத்தனைக்குள்ளும்-நீ
நித்தம் எம்முடனே
நிரந்தரமாய் வாழ்கின்றாய்

செல்வம் குடும்பம்
பளை

(2424)


# தி.மு.க.ஆட்சிக்கெதிரான கருத்துக்கள் அடுத்த மாதம் வெளியிடப்படும்-வைகோ

(மதுரை)

தி.மு.க ஆட்சிக்கு எதிரான கருத்துக்களை வெளியிடப்போவதாக ம.தி.மு.க கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள் ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய வைகோ தி.மு.க வின் ஆட்சியால் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் மக்கள் கோபமடைந்துள்ளதாகவும் தெரிவித் தார்.விலைவாசி உயர்வு மற்றும் மின் தட்டுப்பாடு ஆகிய காரணத்தால் மக்கள் ஆட்சி மாற்றம் காண விரும்புவதாகவும் அடுத்து வரும் சட்ட மன்றத் தேர்தலில் தி.மு.க காங்கிரஸ் கூட்டணி தோற்கும் என்று ம் அவர் கூறினார்.

மேலும் மாநிலத்தில் ஆட்சியில் இருக்கும் கட்சி தவறு செய்தால் அதனைச் சுட்டிக் காட்டுவதே எதிர்க்கட்சியினரின் கடமை என்றும் இதனால் தான் அ.தி.மு.க நடத்தும் பொதுக் கூட்டங்களில் மக்கள் கூட்டம் அலை மோதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே அடுத்த மாதம் இடம்பெறப் போகும் அண்ணா பிறந்த நாளை முன் னிட்டு தி.மு.க கட்சிக்கு எதிரான சில கருத்துக் களை வெளியிடப்போவதாக கூறியிருப்பது அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# நாட்டில் இயங்காதுள்ள அரிசி ஆலைகளை மீண்டும் இயக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

வன்னியில் அரிசி ஆலைகள் உள்ளடங்கலாக நாட்டின் பல பாகங்களிலும் இயங்காமல் இருக்கும் அரிசி உற்பத்தி தொழிற்சாலை பற்றிய ஆய்வை மேற்கொண்டு அவற்றை மீண்டும் இயங்கச் செய்யுமாறு ஜனாதிபதி வர்த்தக அமைச்சுக்குப் பணித்துள்ளார்.

இந்த அமைச்சின் கடந்தகால செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் குறித்து ஆராயும் மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றினார்.

இந்த மாநாடு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது. இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோரின் தேவையை நிறைவேற்றக்கூடிய சீரான திட்டத்தை வகுத்து மேலதிகமாக உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

நெற்செய்கையில் ஈடுபடும் உள்ளூர் விவசாயிகளை வலுப்படுத்தி அரிசி உற்பத்தியை மேம்படுத்த வேண்டும். அத்துடன் நுகர்வோருக்கு நியாய விலையில் அரிசி கிடைக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

வர்த்தக அமைச்சின் பொறுப்பில் இயங்கும் பல்வேறு நிறுவனங்களில் இடம்பெறுவதாக கூறப்படுகின்ற முறைகேடுகள் பற்றி தமக்கு கிடைத்த தகவல்களையும் ஜனாதிபதி இதன்போது வெளியிட்டார்.

இவை குறித்து கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

(ஸ்ரீ-4)

# சட்டவிரோத கடல் பயணங்களை தடுக்க கனடாவில் புதிய சட்டம்

இலங்கையில் இருந்து கனடாவுக்குப் புதிதாக ஒரு படகு அல்லது கப்பல் எந்நேரமும் புறப்பட்டு வரலாம் என்று சர்வதேச நிபுணர்கள் எச்சரித்துள்ள நிலையில் இவ்வாறான மனிதக் கடத்தல் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் புதிய சட்டம் ஒன்றை கனேடிய நாடாளுமன்றம் விரைவாக நிறைவேற்றவுள்ளது.

கனேடிய நாடாளுமன்றம் இம்மாத நடுப்பகுதியில் கூடுகின்றது. அப்போது இப்புதிய சட்டத்தை நிறைவேற்றுகின்றமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்திப் பேசுவார்கள் என்று இந்நாட்டின் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்புதிய சட்டத்தில் மூன்று முக்கிய அம்சங்கள் நிச்சயம் இருக்கும் என்றும் கனடாவின் ஆட்புல எல்லையை அடைவதற்கு முன்பாகவே சர்வதேச கடற்பரப்பில் வைத்து சட்டவிரோத படகுகளையும் கப்பல்களையும் தடுத்து நிறுத்துவதற்கான சட்ட அதிகாரத்தை கனடா பெற்றுக் கொள்ளுதல், சட்டவிரோத பயணிகளை படகுகள், கப்பல்கள் போன்றவற்றில் ஏற்றி வருகின்ற கப்டன்மார், மாலுமிகள், சிப்பந்திகள் போன்றோருக்கு மிகவும் கடுமையான தண்டனை வழங்குதல், படகுகளும் கப்பல்களும் பாரிய கடல்களை அடையும் முன்பாகவே இடைமறிக்கும் வகையில் இலங்கை போன்ற நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் ஆகியனவே அம் முக்கிய அம்சங்கள் என்றும் தெரிகின்றது.

இந்நிலையில் இச்சட்டத்தை உருவாக்குகின்றமை குறித்து கனேடிய அமைச்சர்கள் மந்திராலோசனையில் அடுத்தவாரம் ஈடுபடவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# 14 ஆவது சனத்தொகை மதிப்பீட்டிற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி

(கொழும்பு)

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 14 ஆவது சனத்தொகை மதிப்பீட்டிற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளதாக குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த மதிப்பீட்டிற்குரிய ஆவணங்கள் தயாரிக்கப்படுவதோடு அதிகாரிகளும் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறார்கள் எனவும் 25 மாவட்டங்களையும்சேர்ந்த அதிகாரிகளை கொழும்புக்கு வரவழைத்து குழுவாக பயிற்சி வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த அதிகாரிகளை விட மேலதிகமாக ஆயிரம் பேர் கணக்கெடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் எனவும் இவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் முழு இலங்கையையும் உள்ளடக்கும் மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டில் திரட்டப்படும் தகவல்கள் எதிர்கால அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானதென திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு காலப் பகுதியில் நடத்தப்படவுள்ள பிரதான கணக்கெடுப்பிற்கு முன்னதாக ஒத்திகைக் கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படவுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.


(ஸ்ரீ-4)



நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி திருமதி குமுதா உமாகாந்தனின் மாணவிகள் வழங்கிய விசேட இசை நிகழ்ச்சி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மாணவிகள் பாடல் இசைப்பதையும் செல்வன் எஸ். துவாகரன் மிருதங்கம் வாசிப்பதையும் செல்வன் பி.பிரணவன் தபேலா இசைப்பதையும் படத்தில் காணலாம்.

# 06ஆம் மாத நீங்காத நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு
24
06
1986



இறப்பு
15
03
2010

## அமரர் ரவீந்திரநாதன்–யசோதன் (யசோ)

மூவிரண்டு திங்கள் ஓடி மறைந்தாலும்
முத்தான உன் நினைவுகள்
எம் முன்னே நிழலாடுது
உன்னை ஊட்டி வளர்த்த கைகள்
தேடி அலைகின்றன
நீ பார்த்து வளர்த்த சகோதரங்கள்
பரிதவித்து நிற்கின்றனர்
மறக்க முடியுமா
உன் நினைவுகளை..



விதி வைத்த பொறியிலே
நீ விதையாகிப் போனாலும்
மீண்டும் எம்மோடு விருட்சமாய்
விரைவாக வருவாய் என்ற
எதிர்பார்ப்போடு
வழியெல்லாம் விழி வைத்து
கலங்கி நிற்கின்றோம்
ஒரு வழிப் பாதையிலே
இனி நாமும் உன்பின்னே

அமரர் ர.யசோதனின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.09.2010 புதன்கிழமை இன்று காலை 6.00 மணியளவில் தெனியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். தொடர்ந்து 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபீண்டீகரண கிரியைகளிலும் கலந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம். எமது குடும்ப மூத்த குலவிளக்கின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறிய நெஞ்சங்களிற்கும் கண்ணீர் அஞ்சலியை வெளியிட்ட அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அப்பா,அம்மா, தம்பி,தங்கைமார்.

அம்பன், குடத்தனை.

(2423)


யாழ்ப்பாணக் கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான பாடசாலை சுகாதார மேம்பாடு தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் ஆரம்ப உரையாற்றுவதையும் தாய், சேய் நல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி திருமகள் சிவசங்கர் விடயம் தொடர்பாக விளக்கமளிப்பதையும் இதில் கலந்து கொண்ட அதிபர், ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் க.பொ.த.(உயர்தர) மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதால், மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைக்காக எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை திறக்கப்படவுள்ளது.

அத்துடன் க.பொ.த (சாதாரணதர) மாணவர்களுக்கான விஞ்ஞானப் பரீட்சைகள் நாளை வியாழக்கிழமை தொடக்கம் நடைபெற இருப்பதால் அம்மாணவர்கள் குறித்த திகதி தொடக்கம் பாடசாலைக்கு வருகை தருமாறு பாட சாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ -2)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை நடைபெற்று வருவதால் 3 ஆம் தவணைக்காக இப் பாடசாலை எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை திறக்கப்படும் என நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேது ராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி

(அல்வாய்)

வடமராட்சி வலய ஆசிரியர்களுக் கான ICDL பயிற்சி நெறி 18 நாட்கள் நெல்லியடியில் கேற்வே நிறுவனத்தில் இலவசமாக நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் ஊடாக நாளை வியாழக்கிழமை தகவல் தொழில் நுட்ப இணைப்பாளர், கணனி வள நிலையம், புலோலி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-7-19)

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய உற்சவத்தையொட்டி நடைபெற்று வரும் தெய்வீகப் பேருரையில் இன்று புதன்கிழமை மாலை 6.15 மணி முதல் 7.15 மணி வரை காக்கும் தெய்வம் கண்ணகி என்னும் விடயம் பற்றி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-4)

# நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

இளங்கலைஞர் மன்றத்தினால் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடைபெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் தீர்த்தத்திருவிழாவான இன்று மாலை 6.30 மணிமுதல் 7.30 மணி வரை என்.வி.எம் நவரத்தினம், என்.பரந்தாமன் (பாட்டு), எஸ்,கோபிதாஸ் (வயலின்), எஸ்.மகேந்திரன் (மிருதங்கம்), செல்வன் என்.நந்தகுமார்(முகர்சிங்), சதாவவேல் மாறன்(கடம்) ஆகியோர் வழங்கும் திருமுறைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

★★★

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடைபெற்றுவரும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை மனிதனும் ஆன்மீகமும் என்னும் விடயம் பற்றி எஸ்.கே.என்.தவராசா சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து வட்டுக்கோட்டை ஞான வைரவர், கண்ணகி அம்பாள், பெரியவிளான் வட கேசரி பிள்ளையார் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

★★★

நல்லூர் சைவ மகாசபையினால் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் நடைபெற்றுவரும் வில்லிபாரதம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு கர்ணன் என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

★★★

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தால் நடத்தப்படும் விசேட இசை நிகழ்ச்சியில் இன்று காலை 8.30 மணிக்கு இணுவில் இளந்தொண்டர் சபை மாணவர்கள் மற்றும் காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் வழங்கும் பண்ணிசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து காலை 9.30 மணிக்கு எஸ்.நித்தியானந்தன் குழுவினர் வழங்கும் இசைக்கச்சேரியும் காலை 10 மணிக்கு எம்.என்.பரமேஸ்வரன் குழுவினர் வழங்கும் திருப்புகழ் அர்ச்சனையும் இடம்பெறவுள்ளது.

மேலும் காலை 10.30 மணிக்கு எம்.தயாபரன், காலை 11 மணிக்கு திருமதி கிருஷ்ணவேணி மயில்வாகனம் ஆகியோர் வழங்கும் இசைக்கச்சேரியும் காலை 11.30 மணிக்கு எஸ்.சிவஞானராசா வழங்கும் இசையரங்கு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் மதியம் 12 மணிக்கு செல்வன். கபிலன் சுந்தரமூர்த்தி, பிற்பகல் 12.30 மணிக்கு எஸ்.கருணேஸ்வரன் ஆகியோர் வழங்கும் இசைக்கச்சேரியும் பிற்பகல் 1 மணிக்கு எம்.மகேந்திரன், ஜெ.ஆர்.சுகுமார் குழுவினர் வழங்கும் பக்திப்பாடல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-4)

# மீள்குடியேற்ற பணிகளுக்காக இ.போ.ச.வின் 30 பேருந்துகள் சேவையிலீடுபடுத்தப்படவுள்ளன

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு மாமுனை தொடக்கம் ஆழியவளை வரைக்குமான பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து இராமாவில் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மக்களை அப்பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்வதற்காக அழைத்துச் செல்வதற்கு போக்குவரத்து சபையினர் 30 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த அனுமதி வழங்கியுள்ளனர்.

இதில் இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ் சாலையிலிருந்து 10 பேருந்துகளும் பருத்தித்துறை, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகியவற்றிலிருந்து தலா 5 பேருந்துகளும் சேவையில் ஈடுபடவுள்ளதாக இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ் சாலை முகாமையாளர் எஸ்.யோகநாதன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# ஐஸ்கிறீம் வானின் பின்சில்லினுள் அகப்பட்ட சிறுமி படுகாயம்

(பொற்பதி)

பொற்பதி வீதியில் ஐஸ் கீறிம் விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஐஸ்கிறீம் வானின் பின்சில்லினுள் அகப்பட்ட சிறுமியொருவர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது, பொற்பதி யூடி வீட்டுத்திட்டத்தில் விற்பனை செய்தவதற்காக வந்த ஐஸ்கிறீம் வானில் குறித்த சிறுமி ஐஸ்கிறீம் வாங்கி விட்டு, வீடு செல்வதற்காக அப்பாதையருகே இருந்த வளைவால் திரும்பும் போது இச்சம்பவம் இடம்பெற்றது. இதில் குறித்த சிறுமி ஐஸ்கிறீம் வானின் பின் சில்லினுள் அகப்பட்டு படுகாயமடைந்துள்ளார். இதில் வடமராட்சி கிழக்கு உடுத்துறையைச் சேர்ந்த பதீஸ் கோபிகா வயது (6) என்ற சிறுமியே படுகாய மடைந்தவராவர். இவ் விபத்து தொடர்பாக, பருத்தித்துறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-4-2)

யாழ்.செய்திகள்

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானம் மற்றும் சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாடும் சத்துணர்வும் தொடர்பான செயலமர்வு நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

உடுவில் கோட்ட ஆசிரியர்களுக்கு யா/ இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பளை கோட்ட ஆசிரியர்களுக்கு யா/ இணுவில் மத்திய கல்லூரியிலும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் இரண்டு ஆசிரியர்களை இச்செயலமர்வில் பங்கு பற்றுமாறு வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## அதிபர்களுக்கான அறிவித்தல்

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளின் தர உள்ளீடு மற்றும் உயர்கல்வி செயற்பாடுகளுக்கான இரண்டாம் காலாண்டுக்குரிய (01.04.2010 தொடக்கம் 31.08.2010 வரை உள்ள) செலவு முன்னேற்ற அறிக்கையினை எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் வடமராட்சி வலயத்திலுள்ள நிதிப் பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலய கல்வி அலுவலக கணக்காளர் ஆ.கிரிதரன் அறிவிதுள்ளார். (ஸ்ரீ-2-19)

# கல்வி விசாக்கள் தொடர்பில் பிரிட்டனில் பெரும் சர்ச்சை

கல்வி கற்பதற்காக பிரிட்டனுக்குள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியிலி ருந்து வந்துள்ள வெளிநாட்டு மாணவர்களில் ஐந்தில் ஒரு பங்கு அளவானோர் வந்து ஐந்து வருடங்களாகியும் பிரிட்டனிலேயே தங்கியிருப்பதாக புதிய ஆய்வுகள் சுட்டிக் காட்கின்றன.

வெளிநாட்டவர்கள் பிரிட்னுக்குள் வர அனுமதிப்பதில் சாதுரியமான கட்டுப்பாடு களை நடைமுறைப்படுத்தப்போவதாக குடிவரவுத் துறை அமைச்சர் டேமியன் கிரீன் கூறுகிறார்.

ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ், த லண்டன் ஸ்கூல் ஒஃப் எக்கனாமிக்ஸ் போன்ற உலகப் பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் காரணமாக, நீண்டகாலமாகவே கல்விக்குப் பிரசித்தமான இடமாக பிரிட்டன் இருந்து வருகிறது.

2009 ஆம் ஆண்டில் கடந்த ஆண்டு களைக் காட்டிலும் மூன்று மடங்குக்கும் அதிகமான மாணவர் விசாக்கள் பிரிட்டனில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் நடத்தியுள்ள புதிய ஆய்வு களின்படி, பிரிட்டனில் கல்வியை நிறைவு செய்து கொண்டதன் பின்னர் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் இங்கேயே தங்கிவிடுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டில் கற்கை நெறி களை ஆரம்பித்த 185 ஆயிரம் பேரில் ஐந்தில் ஒருவர் என்ற அளவுக்கும் அதிகமானோர் ஐந்து வருடகாலமாக இன்னும் பிரிட்டனிலேயே தங்கியிருக்கின்றனர்.

இந்த எண்ணிக்கையை குறைப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராயவுள்ளதாக பிரிட்டனின் குடிவரவுத் துறை அமைச்சர் டேமியன் கிரீன் கூறியுள்ளார்.

பிரிட்டன் வாசிகளாக நாட்டிலிருந்து வெளியேறியோரின் எண்ணிக்கை போக இங்கு குடியேறியுள்ளோரின் எண்ணிக்கையின் நிகர அளவைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள விரிவான திட்டங்களின் ஒரு அங்கமாக இதனை முன்னெடுக்கவுள்ள தாக டேமியன் கிரீன் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக இயங்குவதனை உறுதிப்படுத்த வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக இயங்குவதனை உறுதிப்படுத்த வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மக்களின் அபிலாசைகள் மற்றும் நல்லாட்சியை மையப்படுத்தியதாக அரசியல் சாசனத் திருத்தங்கள் அமைய வேண்டுமென கட்சி சுட்டிக்காட்டிள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்க வேண்டும் என்பதே தமது கட்சியின் நீண்டகால எதிர்பார்ப்பாகும் என கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மக்களின் நம்பிக்கை காணப்படுமாயின் எத்தனை தடவைகளும் நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிப்பதில் சிக்கல் கிடையாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லும் தலைவர் ஒருவரின் சேவையை தவணைக் காலங்களினால் வரையறுப்பது நியாயமற்றதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் இலஞ்ச ஊழல் தடுப்பு, நீதிமன்றம், பொலிஸ் மற்றும் நீதித் துறை போன்றவற்றின் ஆணைக் குழுக்கள் பூரண சுயாதீனத் தன்மையுடன் இயங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# நாட்டுக்கூத்து

(குருநகர்)

ஆனைக்கோட்டைஉயரப்புலம் புனித அடைக்கல நாயகி ஆலயத் திருநாள் இன்று புதன்கிழமை பங்குத் தந்தை ஏ.மௌலீஸ் தலைமையில் கொண்டாடப் படவுள்ளது.

இதனைமுன்னிட்டு அண்ணாவியார் திருமதி ஏ.வண்ணமணியின் நெறியாள்கையின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட யூதாததேயு என்ற நாட்டுக்கூத்து இரவு 8 மணிக்கு ஆலய அரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் அண்ணாவி பேக்மன் ஜெயராசா (தாளம்) மற்றும் எஸ்.இராசலிங்கம் (மிருதங்கம்) ஆகியோருடன் இளங்கலைஞர்கள் இணைந்து ஆற்றுகையாக மேடையேற்றவுள்ளார்கள்.

(ஸ்ரீ-2-39)



யூனியன் அஷ்யூரன்ஸ் இழப்பீட்டுக்கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் இழப்பீட்டுக்கொடுப்பனவை பிராந்திய முகாமையாளர் ந.சுகுணன் வாடிக்கையாளர் ஒருவருக்கு வழங்குவதையும் அருகில் விற்பனை முகாமையாளர்கள், காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 08.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்

- 0070 - டைட்டஸ் தலைமையிலான ரோமப் பேரரசின் படையினர் ஜெருசலேம் நகரைக் கைப்பறறினர்.
- 1514 - லித்துவேனியா, மற்றும் போலந்துப் படைகள் ஓர்ஷா என்னுமிடத்தில் ரஷ்யாவைத் தோற்கடித்தன.
- 1655 - சுவீடனின் காரெல் பத்தாம் குஸ்டாவ் மன்னன் போலந்தின் வார்சா நகரைப் பிடித்தான்.
- 1727 - இங்கிலாந்து, கேம்பிறிட்ஜ்ஷயர் என்னுமிடத்தில் குழந்தைகள் பொம்மைக் களியாட்ட விழா ஒன்றில் இடம்பெற்ற பெருந்தீ விபத்தில் 78 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட பெரும்பாலானோர் குழந்தைகளாவர்.
- 1796 - பிரெஞ்சுப் படையினர் ஆஸ்திரியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1831 - 4ம் வில்லியம் பிரித்தானியாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1888 - லண்டனில் கிழிப்பர் ஜேக்கினால் கொல்லப்பட்ட இரண்டாவது நபரான அன்னி சப்மனின் உடல் கண்டெடுக்கப்பட்டது.
- 1900 - டெக்சாசை சூறாவளி கால்வெஸ்டன் தாக்கியதில் 8,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1923 - கலிபோர்னியாவில்7அமெரிக்கக் கடற்படைக்கப்பல்கள் மூழ்கின.
- 1930 - ஸ்கொட்ச் நாடா முதன் முதலாக விற்பனைக்கு விடப்பட்டது.
- 1934 - நியூஜேர்சிக் கரையில் பயணிகள் கப்பல் தீப்பற்றி எரிந்ததில் 135 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: லெனின்கிராட் நகரின் மீது ஜெர்மனி படையெடுத்தது.
- 1945 - சோவியத் படைகள் வட கொரியாவை ஒரு மாதத்திற்கு முன்னர் கைப்பற்றியமைக்குப் பதிலடியாக அமெரிக்கப் படைகள் தென் கொரியாவில் தரையிறங்கின.
- 1951 - பசிபிக் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு 48 நாடுகள் சான் பிரான்சிஸ்கோவில் ஜப்பானுடன் அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்தின.
- 1991 - யூகொஸ்லாவியாவிடம் இருந்து மசடோனியக் குடியரசு விடுதலை அடைந்தது.
- 2006 - ஆப்கானிஸ்தான், காபூலில் அமெரிக்கத் தூதரகத்தின் முன் நடத்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 2 அமெரிக்க வீரர்கள் உள்பட 16 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் மாலேகான் நகரில் மசூதி, மற்றும் சந்தைப் பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் 40 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.


### பிறப்புகள்

- 1913 - ஆர்.மகாதேவன், தமிழக நகைச்சுவை எழுத்தாளர்





### இறப்புகள்

- 1980 - வில்லார்ட் ஃபிராங்க் லிப்பி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1908)
- 1995 - நா.முத்தையா, ஆத்மஜோதி இதழாசிரியர் (பி. 1918)

**2008 - வயலின் இசைக் கலைஞர் குன்னக்குடி வைத்திய நாதன் இறந்தார் (பி. 1935)**



# நல்லைக் கந்தன் தீர்த்தோற்சவ ...


## பூலோக கைலாசத்தில் தீர்த்தோற்சவம்



நல்லூர் என்ற சொல்லை ஆராயுமிடத்து தமிழ்நாட்டை ஆண்ட அரசர் பலர் தம்பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உருவாக்கினார்கள்.பாண்டி நாட்டில் வீரபாண்டிய நல்லூர்,அரசகேசரி நல்லூர், மானாபரண நல்லூர், செய்துங்க நல்லூர் முதலிய ஊர்கள் பாண்டியகுலத்தைச் சோந்த மன்னர் பெயரை விளக்கி நிற்கின்றன.

சோழ நாட்டிற் பெருஞ்சோழ மன்னர்கள் உருவாக்கிய நல்லூர்களைச் சாசனங்களில் காணலாம்.முடிகொண்ட நல்லூர், அநபாய நல்லூர்,திருநீற்றுச் சோழ நல்லூர், திருத் தொண்டர் தொகை நல்லூர்,சிவபாதசேகர நல்லூர், கரிகடிரத சோழ நல்லூர்முதலிய நல்லூர்கள் சோழ மன்னருடைய விருதுப் பெயர் பெற்ற பதிகளாகும்.

ஈழத்திலேயும் நல்லூர் எனப் பெயரிலே கிராமங்கள் ஐந்துள.மற்றைய நான்கும் பூநகரியிலும் குருநகர் பகுதியிலும் களுத் துறையிலும் உள்ளனவாம். இவ்வாறாக நல்லூர் என்ற சொல்லுக்கு சிறப்புக்கள் உண்டு.அத்தகைய சிறப்புக்களோடு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் மூலஸ் தானத்திலும் வேல் காணப்படுகின்றது.

### மூலஸ்தானத்தில் வேல்

வேல் முருகனது அருளை நல்கும் கருவி யாகக் கருதப்படுகின்றது.வேல் ஞானத்தின தும் அறிவினதும் அடையாளம்.வேலை வழிபடும் ஆதிமரபு இன்றும் தமிழர்களி டையே தொன்று தொட்டு நிலவிவருகின் றது.இன்று நல்லூரில்மட்டுமல்ல செல்வச் சந்நிதியிலும் கதிர்காமத்திலும் முருக வழி பாடு உண்டு. இந்த ஆலயங்களில் மூலஸ் தானத்தில் அழகிய வேற்பெருமானாக வீற்றிருந்து அருள்பாலிப்பதுடன் நம்புப வர்களுக்கு அபயமளிக்கின்றது .இத்த கைய 'வேல்' மஹோற்சவ காலங்களில் வழிபாடியற்றப்பட்டு திருப் பவனியாக உலா வந்து வணங்கப்படுகின்றது.

### அபயமளிக்கும் ஆறுமுகப் பெருமான்

நல்லூரில் தெற்கு நோக்கி ஆறுமுகப் பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.அவரே நேரில் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள் பாலித்து வருகின்றார். ஆறுமுகப் பெருமானின் தோற்றம் பற்றிய பலவிதமான கருத்துக்கள் கூறப்பட்டாலும் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமம், சக்தியோசாதம் என்று சிவபெருமானுடைய ஐந்து முகங்க ளுடன் உமாதேவியாரின் ஒருமுகமும் சேர்ந்த சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினார் என்பது கருத்து.

வடக்கு,கிழக்கு,தெற்கு,மேற்கு,மேல்கீழ் என்ற எங்கும் நிறைந்த தன்மையைக் காட்டுவது ஆறுமுகம் என்பது மற்றொரு கருத்து.முருகனை விடச் சிறந்த அழகன் இல்லை.எனவே தான் அவன் பெயர் முருகன்.அவனைவிட சிறந்த இளைஞன் இல்லை.எனவேதான் அவன்பெயர்குமரன். அவனை விட பெரியஞானி இல்லை. எனவே தான் அவன் ஞானபண்டிதன்.இவ்வாறாக பல்வகைச் சிறப்புக்களால் பெருமையுடையவன் முருகன்.எங்கள் நல்லூரில் பன்னெடுங் காலமாக அருளாட்சி செய்கின்றான். நல்லூர் மட்டுமல்ல உலகமே அவனின் பேரருட் திறத்தினால் கட்டுண்டு நிற்கின்றது.நேற்றைய தினம் பூலோக கைலாசத்து இரதோ ற்சவப் பெருவிழா இலட்சோபலட்சம் மக்களுடன் மிகச்சிறப்பாக பக்தி பூர்வமாக நடைபெறுகின்றது.


### பஞ்சகிருத்தியத்தில் தீர்த்தம்

இன்று பஞ்சகிருத்தியத்தில் அருளல் தீர்த்தோற்சவப் பெருவிழா நடைபெறுகின்றது. கொடியேற்றம் படைத்தலையும் திருவீதியில் பெருமான் எழுந்தருளி வருவது காத்தலையும் தேரில் ஆரோகணித்து வருவது அழித்தலையும் மௌன உற்சவம் மறைத்தலையும் தீர்த்தோற்சவம் அருளலையும் குறித்து நிற்கிறது.தீர்த்தம் ஆட பஞ்சமூர்த்திகளும் எழுந் தருளும் காட்சி நல்லூரில் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்து விடுகின்றது.சண்முகத் தீர்த்தம் புண்ணிய தீர்த்தமாக எம்பாவமெல்லாம் போக்கும் பரமானந்த சாகரமாக அமைந்து விடுகின்றோம். அடியவர்கள் எல்லோரும் முருகப் பெருமான் திருவருள் பெருக்கிய தீர்த்தத்தில் "தீர்த்தோம் பாவம் தீர்த்தோம்" ஆடிமகிழ்ந்து பக்திப்பரவசமாயினர். எல்லோருக்கும் பெருமானின் அருள் நலம் பெருகியது.

வர்ணனைக் கலாநிதி மதுரகவி
காரை.எம்.பி.அருளானந்தன் J.P
(வானொலி,தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர்)
ஆசிரியர்,ஸ்ரான்லிக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.




## நல்லை ஆதீன முதல்வ... அருளாசிச் செய்தி



நல்லைக் கந்தனின் ... பத்தைந்தாவது மஹோ... சவப் பெருவிழா தீர்த் தோற்சவமாக இறை வனின் அருள் உற் சவமாக நடை பெறுகி... சண்முக...ர்த்தம் பரம... சாகரமாக ஆனந்தமயமாகக் காட்... கின்றது.அடியார்கள் தம் வினையாவும் ... நல்லருள் சேர்க்கின்ற அருளல் உ... ஆண்டுதோறும் நடைபெறுவது ... இவ்வாண்டும் மிகச்சிறப்பாக நடை பெ... றது.எல்லாம் வல்ல நல்லைக் கந்தன் ... ருக்கும் நல்லருள் பெருக்க வேண்டும்.வை... அல்லல்கள் ஒழிந்து எல்லோருக்கும் நல்... காட்டவேண்டும். அல்லலுறுவோர்க்கு ... கொடுக்க வேண்டுமென திருவருளை ... பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானச...
பரமாச்சார்ய சுவாமிகள்
நல்லை ஆதீனம்.

Teleseen Marketing (PVT) Ltd.
Teleseen — Where the world shops

100% Satisfaction Guaranteed
Quality, innovative fitness, Health Care, Personal Care, Education, Home & Garden products

Free: Catalogue/DVD/Delivery/Maintenance

Ab Circle Pro — Rs. 19,990/-only — Exercising this way burns far morecalories than just cardio or toning exercises

Sitdown Situp Gym — Rs: 17,990/- only — Get super power crunch along with work-out for arms, buns & thighs

AB Tronic X2 — Rs. 14,990/- only — The breakthrough fitness system that'll revolutionize the way you work out. forever.

Klear Active — Rs. 4,990/- only — A fast and easy skin care routine for occasional pimples as well as moderately advanced acne

Slim N Lift Supreme - Single — Rs. 3,750/- only — A revolutionary slimming and lifting undergarment that can give you a sexy, curvy hour glass figure instantly.

YourBaby Can Read — Rs. 19,990/- only — A babyâ€™s brain thrives on stimulation and develops at a phenomenal pace nearly 90% during the first five years

Table Mate — Rs. 4,490/- only — This versatile and portable table is a must for every household.

Ervamatin Hair Oil — Rs. 5,390/- only — This lotion provides effective & fast therapy for hair loss and its treatment ensures excellent therapeutic results.

For more details visit our Website: www.teleseen.com

Authorized Dealer
Saras Enterprises, #328 Hospital Rd, Jaffna.
Call Now T.P : 077 9265421

"நலமருளும் நல்லைக் கந்தனின் தீர்த்தமாடி திருவருள் சேர்ந்து மகிழ்ந்தோம்"
"சேமிப்பே உங்கள் செல்வம்"
தேசிய சேமிப்பு வங்கி
இல.496,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



"கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்..."
கோவில் அபிஷேகப் பொருட்கள், நாள் அத்திபாரப்பொருட்... நாள் சரக்கு வகைகள், எண்ணெய் வகைகள், கூந்தல் வளர்... C.S.R. பொன்னாங்காணித்தைலம், பீனிய வியாதிக்குரிய பி... நாட்பட்ட நோ, வாதத்திற்குரியC.S.R. தாளங்காய்எண்ணெ... சமிபாடடையாத தன்மை என்பனவற்றிற்குரிய C.S.R.ஓமத்தி... (முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்) இவை அனைத்தை... பெற்றிட
க.செ.கைலாசம் பிள்ளை அ...
(சித்த ஆயுர்வேத மருந்துகள், அபிஷேகப் பொருட்கள் ...
5(76), பெரியகடை - யாழ்ப்பாணம். TP- 021...

"சண்முக தீர்த்தத்தில் ஆடினோம் சரணம்"
அம்பாள் மரக்காலை
Ambal Timber Depo
No.261, point pedro Road,
Nallur - Regno,NAL/58

"நல்லைக் கந்தனுக்கு அரோகரா"
"பசுவதை ஒழிப்போம்"
தேனு களஞ்சியம்
THENU KALANCHIYAM
இல.29,நவீனசந்தை உட்புறம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

"பூலோ...
யாழ் நகரில்...
கலை, வர்த்தக...
வாய்ந்த நிறுவ...
A/L2011,A...
NI...

"நல்லை நகர் செவ்வேளே சரணம்"
குணசேகரம் பல்பொருள் வாணிபம்
இல.517, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

"நல்லைக் கந்தனுக்கு அரோகரா"
RAM Communication
No.06, Hospital Road,
Jaffna
TP. No: 021 222 2007
Fax No: 021 222 8428 Hotline: 0778694353


யாழ்.காலணிய...
TP. No: 02...
yarl trades center Agents for Bat...
11, modern market - Hospital Ro...
Jaffna.

# நல்லூர்க்கந்தனின் இரதோற்சவக் காட்சிகள்...



தேரில் எழுந்தருளுவதற்காக சுவாமி வரும் காட்சி...





சிதறுதேங்காய் உடைக்கும் பக்தர்கள்

அலைமோதும் பக்தர் கூட்டம்




சுவாமி தேரில் ஆரோகணித்தல்





கற்பூரச் சட்டி எடுக்கும் பக்தர்கள்.















காவடி எடுத்து நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் பக்தர்கள்





பச்சை சாத்தி வலம் வரும் கந்தன்



# ஈழத்தவர் வரலாறு

29

## 5. யாழ்ப்பாண இராச்சியம் ஆரியச்சக்கரவர்த்திகள்

வலிகாமம் (குதிரைமலை – கந்தரோடை, காசாத்துறை – காங்கேயன் துறை, ஜம் புக் கோளப்பட்டினம் – திருவடிநிலை), வல்லிபுரம் முதலான பகுதிகளில் பரவி வாழ்ந்த சிங்கள பௌத்தர்களும் தமது பாதுகாப்புக்கருதி யாழ்ப்பாணக்குடாநாட்டைவிட்டு இடம்பெயர நேர்ந்தது என ஊகிக்கலாம். அதனால் தான் யாழ்ப்பாண இராச்சியம் தோற்றம் பெற்ற



பொலநறுவை முதலாம் சிவாலயம்

போது, அல்லது பூநகரின் சிங்கை நகரிலிருந்து தமிழர் இராச்சியம் யாழ்ப்பாணத்திற்கு இடம்மாறியபோது மக்கட் குடியேற்றங்களை யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிறுவ நேர்ந்தது. மாகனின் பொலநறுவைக் கைப்பற்றலின் விளைவாக எப்படி இராசரட்டைச் சிங்கள மக்கள் தென்புலம் பெயர்ந்தார்களோ அதேபோல மாகனின் தோல்வியுடன் உத்தரதேசத் தமிழ் மக்கள் வடக்கு நோக்கி இடம்பெயர நேர்ந்துள்ளது. இதுபற்றிப் பின்னர் விரிவாக ஆராய்வோம்.

சோழர் மறைந்தாலும் சோழராட்சி ஈழ வரலாற்றில் குறிப்பாகத் தமிழர் வரலாற்றில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. சோழராட்சியின் தவிர்க்க முடியாத விளைவு யாதெனில் ஈழத்தின் மதத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் இருந்து – பிராமண சைவ சமய நடைமுறைகளும் திராவிடக் கலையும், கட்டிடக்கலையும், தமிழ்மொழியும் ஊடுருவி மிகபப்லம் வாய்நத முறையில் மேலோங்கியமையே, இக்காலந்தொட்டு ஈழத்தின் மீது தென்னிந்தியா செலுத்திய ஆதிக்கம் முற்றுமுழுதாக இந்துமத உள்ளடக்கத்தினையே கொண்டதாயிருந்தது. மாகனின் ஆட்சிக் காலத்தில் சைவசமயிகளுக்கும் தமிழரும் மேலாதிக்க மிக்க மக்களாக விளங்கினர். அதனால், பொலநறுவைக்கு வடக்கே இராசரட்டையில் வாழ்ந்த சிங்கள மக்கள் தென் புலம் பெயந்ததுபோல, யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்ந்த சிங்கள பௌத்தர்களும் குடாநாட்டை விட்டு வெளியேறித் தென்புலம் பெயர நேர்ந்தது.

1236 ஆம் ஆண்டு 2 ஆம் பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னன், கலிங்க மாகனைப் பொலநறுவையிலிருந்து துரத்தி விட்டான். அந்த யுத்தத்தில் கலிங்கமாகன் இறந்ததாக, ஆதாரமில்லை என்றும் அவன் வட விலங்கைக்குத் தனது எஞ்சிய படைகளுடன் சென்றிருக்க வேண்டும் என கா. இந்திரபாலா கூறுகிறார். மதுரைக்கு இடம் பெயர்ந்திருக்க வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். எவ்வாறாயினும் 1236ஆம் ஆண்டிலிருந்து 1242 ஆம் ஆண்டு வரை கலிங்கமாகன் எங்கிருந்தான் என்பது தெளிவாகவில்லை. இக்குறித்த காலத்தில் வட விலங்கையை பாண்டிமழவன் என்ற அதிகாரியே நிர்வகித்து வந்தான் என்பது கைலாயமாலையிலிருந்து புலனாகின்றது.

தென்னிலங்கைச் சிங்களவரசனின் அச்சுறுத்தல் ஆரம்பமானபோது பாண்டிமழவன் கைலாயமாலையில் விபரித்தவாறு கரந்துறைந்திருந்த கலிங்கமாகனை வலிந்து அழைத்து வந்து விஜயகாலிங்க ஆரியச்சக்கரவர்த்தி என்ற நாமத்தோடு அரியணை அமர்த்தினான் என்று துணியலாம்.

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

பாண்டிமழவனைப் பற்றி கைலா யமாலை கூறுவனவற்றை புனைந்துரைகள் என்றோ கற்பனைக்கதைகள் என்றோ கொள்ள முடியாது.

இவ்வாறு பாண்டி மழவனால் அழைத்து வரப்பட்டவன் விஜய கூழங்கை சக்கரவர்த்தியென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. யாழ்ப்பாண இராட்சியத்தின் முதலாவது ஆரிய சக்கரவர்த்தி இவனே, விஜயகூழங்கை ஆரியசக்கரவர்த்தி என்றும் சிங்கை ஆரியன் என்றும் இவன் அழைக்கப்பட்டான். செகராஜசேகரன் என்ற சிங்காசனப் பெயரையும் புனைந்து கொண்டான்.

*யாழ்ப்பாண வைபவ விமர்சனம்* என்ற நூலில், சுவாமி ஞானப்பிரகாசகர் கூறுவது போல, விஜயகூழங்கை என்ற பெயர் விசய காலிங்க என்ற பெயரின் திரிபாகும் எனக் கொள்ள வேண்டும்.

முதலியார் செ.இராசநாயகத்தில் இருந்து கா.இந்திரபாலா வரை இக்கூற்றின் மெய்மையை ஏற்றுக்கொள்கிறார்கள். விசய காலிங்கன் என முடிவெடுக்கும் போது, விசயகாலிங்கனை கலிங்கமாகன் என அடையாளம் காண்பதில் சிரமம் இல்லை. என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கலிங்கமாகன் சிங்கை நகரின் மன் னாக அமைந்ததால் சிங்கை ஆரியன் எனப்பட்டான். சிங்கை நகரில் இருந்து தலைநகரை மீண்டும் நாகதீபத்திற்கு (யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு) இடமாற்றிய பெருமை இந்த காலிங்க ஆரிய சக்கரவர்த்தியையே சேரும்.

*புதிய தலைநகர் உருவாக்கம்*

உக்கிரசிங்க மன்னன் கதிரமலை (கந்த



பொலநறுவை இரண்டாம் சிவாலயம்

ரோடை) யிலிருந்து தனது தலைநகரை பூநகரி சிங்கை நகருக்கு மாற்றிக்கொண்டார். யாழ்ப்பாணக்குடாநாட்டில் பௌத்தமும் சிங்களவரும் ஆதிக்கம் பெற்றதால் இந்த தலைநகர் இடமாற்றம் நிகழ்ந்தது. மீண்டும் 13ஆம் நூற்றாண்டில் இந்த நிலைமை மாறியது. நாகதீவில் இருந்து சிங்களவர்கள் தென் புலம் பெயர்ந்தனர். கலிங்கத்துமாகன் மீண்டும் உத்தர தேசம் மன்னான சிங்கை நகரில் முடிசூடிக் கொண்ட செய்தி எஞ்சிய பௌத்த சிங்களவர்களையும் இடம்பெயர செய்திருக்கும் என நம்பலாம்.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

அக்கால நாகதீவின் தென்பகுதியில் இன்றைய நல்லூர்பகுதியில் ஓரளவு வளர்ச்சி பெற்ற குடியேற்றம் ஒன்று காணப் பட்டிருக்க வேண்டும் யாழ்.பாடி பரிசிலாகப் பெற்ற, யாழ்ப்பாணனால் உருவாக்கப்பட்ட குடியிருப்பு இதுவாகும்.

(தொடரும்)





உரும்பிராய் கிழக்கு காந்திஜீ சனசமுக முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட சுகாதார இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை. தியாகராசா உரையாற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு அருட்தந்தை எஸ்.நிக்ஷன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் -நல்லூர் செய்தியாளர்)*

## ஐ.தே.கட்சியின் துணைத் தலைவராக ரவி கருணாநாயக்க நியமிக்கப்படலாம்

(கொழும்பு)



ஐக்கிய தேசியக்கட்சியின் துணைத் தலைவராக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கட்சி ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் ரவி கருணாநாயக்கவுக்கு ஒப்படைக் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் கட்சியின் துணைத் தலைவர் பதவியை ருக்மன் சேனாநாயக்க வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரவி கருணாநாயக்க கொழும்பு மாவட்ட தலைவர் பதவியிலும் நீடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## ஒலியை மாசுபடுத்தியதாக கொத்துரொட்டி தயாரிப்பாளர் கைது


ஒலியை மாசுபடுத்திய குற்றச்சாட்டின் பேரில் கொத்து ரொட்டி தயாரிக்கும் ஹோட்டலின் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோட்டே மாநகரசபையின் சுகாதாரப் பரிசோதகரினால் குறித்த ஹோட்டல் ஊழியருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஹோட்டல் ஊழியர் கொத்து ரொட்டி தயாரிக்கும் முறையினால் அயலவர்களுக்கு இடையூறு ஏற்படுவதாகவும், ஒலி மாசுறுவதாகவும் சுகாதாரப் பரிசோதகர் சுஜீவ சமன் குமார என்பவர் நீதிமன்றில் அறிவித்துள்ளார். நாவல கொஸ்வத்த சந்தியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் கடமையாற்றிய ஊழியரே இவ் வாறு கைது செய்யப்பட்டு நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

ஒலி மாசுபடுத்தல் சட்டத்தின் கீழ் குறித்த நபருக்கு தண்டனை வழங்கப்பட முடியும் என குறித்த சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். ஒலியை மாசுபடுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட கே.ஜயதிலக்க என்ற நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதுடன் குற்றத்தை ஒப்புக் கொண்ட காரணத்தினால் 5ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா நம்பிக்கை பிணையிலும் சந்தேக நபரை நீதவான் விடுதலை செய்துள்ளார். (ஸ்ரீ-2)

# விழா சிறப்பு மலர் - 2010.09.08





...முதல்வரின்
...செய்தி


...கந்தனின் இரு
...வது மஹோற்
...விழா தீர்த்
...ாக இறை
...ருள் உற்
...டை பெறுகின்றது.
...ர்த்தம் பரமா...த
...ாகக் காட்சியளிக்
...னையாவும் போக்கி
...ருளல் உற்சவம்
...பெறுவது போல
...க நடை பெறுகின்
...க் கந்தன் எல்லோ
...வேண்டும்.வையத்தில்
...ருக்கும் நல்ல வழி
...வோர்க்கு அபயம்
...வருளை வியந்து


அன்பு
ஞானசம்பந்த...

### நல்லூரை வலம் வந்து புகழ் பாடுவோம்

நாளும் நல்லூரை வலம் வந்தே
நல்லூரான் புகழ் பாடுவோம்
வாழும் உரிமை பெறவலம் வந்தே
வண்ணமயில் வாகனன் புகழ் பாடுவோம்
நீளும் துயர்நிறுத்த வலம் வந்தே
நிமலன் அருள் தேடி புகழ் பாடுவோம்
வேலும் மயிலும் துணை யென்றே
வேலன் புகழ் பாடுவோம்

த.துரியாதரன்
த.துஸ்யந்தி(துளசி)







## மாநகர முதல்வரின் பிரார்த்தனைச் செய்தி



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லைக் கந்தனுக்கு இன்று இருபத்தைந்தாவது திரு விழா தீர்த்தோற்சவமாக பக்தி பூர்வமாக நடை பெறுகின்றது.நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழல் புதுப்பொலிவோடு விளங்குகின்றது."நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனால் நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்" என அருள் மொழி பகர்ந்தவர் எங்கள் யோகர் சுவாமிகள்.

நல்லைக்கந்தனின் உற்சவம் ஆரம்பமாகி விட்டால் யாழ்ப்பாணக் குடாநாடே புனிதமான நகராக மாறிவிடும். உலகமெங்கும் வாழும் சைவத்தமிழ் மக்களின் உள்ளங்களில் நல்லைக் கந்தனின் மஹோற்சவப் பெருவிழாக் காட்சிகள் நிறைந்து விடும்.

என்றுமில்லாதவாறு இம்முறை நல்லைக் கந்தனின் மஹோற்சவங்கள் அமைதியான சூழலில் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது.நல்லூருக்கு வழிபடவரும் பக்தர்கள் புனிதமான நல்லையம் பதியில் தமது நேர்த்திக் கடன்களை, வழிபாடுகளை நிறைவேற்றி வருகின்றார்கள். எல்லா மக்களும் நல்லூரில் ஒரு ரூபாயைக் காணிக்கையாக வழங்கி அர்ச்சனை செய்து முருகனருளை பெறுகின்ற வாய்ப்பு காலகாலமாக நல் லூரில் இடம்பெற்று வருகின்றது. நேற்றைய தினம் பல இலட்சம் மக்கள் நல்லைக் கந்தனின் தேர்விழாவில் கலந்து திருவருள் சேர்ந்தனர்.இன்று தீர்த்தோற்சவத்திலும் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் சண்முகத் தீர்த்தத்தில் தீர்த்தமாடி முருகனருள் பெறுகின்றனர்.எல்லோருக்கும் எல்லா நலன்களையும் நல்லைக்கந்தன் தந்தருள பிரார்த்திப்போமாக.


திருமதி யோகேஸ்வரி பற்குணராசா.(மாநகர முதல்வர்)


### கலாசார ஆடை கட்டி கந்தனைத் தொழுவோம் வாரீர்


எங்களுக்கோர் கலாசாரம் இருக்குதடி தோழி
ஏற்றங்கள் தந்தெம்மை அது வளர்த்ததடி தோழி
பொங்கி வரும் மோகமதை போக்குமடி தோழி
புரதான தமிழ் மரபை பேணுமடி தோழி
கந்தனதுவிழாவிற்கு கலாசார ஆடைகட்டி போவமடி
கைகுவித்துஅவனருளை பெறுவமடிவாடி
எந்தனது குலத்திற்கு பெருமை தனை சேர்பமடி தோழி
எங்களது கலாசாரம் பேணி வாழ்வோமடி வாடி


மதுரகலா வித்தியா

*மலரமைப்பு*
மதுரகவி காரை
எம்.பி.அருளானந்தம்











...றியாதன கண்டேன்
...திபாரப்பொருட்கள்,
..., கூந்தல் வளர்ச்சிக்கேற்ற
...வியாதிக்குரிய பிருங்கமிலாதித் தைலம்,
...ங்காய்எண்ணெய், பொருமல்,
...ய C.S.R.ஓமத்திரவியம் (குழந்தைகள்
...வ அனைத்தையும் ஒரே இடத்தில்
...ள்ளை அன்சன்
...கப் பொருட்கள் விற்பனையாளர்)
TP- 021 222 2912

"நலம் பெருக்கிடும் பரமானந்த சாகரம் நல்லைக்கந்தனின் சண்முக தீர்த்தம்"
உங்களின் உடலினை நீங்கள் கட்டுக் கோப்புடன் வைத்துள்ளீர்களா? இதோ அதற்கான தீர்வும் எம்மிடமிருந்து
இதோ! யாழ். மண்ணில்
ESer Marketing (Pvt) Ltd
இல.38, மணிக்கூட்டு வீதி,
(போதனா வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

"வேலை வணங்குவதே எமக்கு வேலை"
SDS.Computer Services
For All Your ?? Solution
SALES
REPAIR & MAINTENANCE
SOFTWARE DEVELOPING
WEB DESIGNING
....And many more
T.P - 0214590686
Fax - 0212228418
mobile - 0777874705
#328, Hospital Road,
Jaffna.

"பூலோக கைலாசத்தில் தீர்த்தமாட வாரீர்"
யாழ் நகரில் ....
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகளை கொண்ட ஒரே ஒரு உயர்தரம் (A தரம்) வாய்ந்த நிறுவனம்.
A/L2011, A/L2012.
A/L DAY CLASS.
பழைய பாடத்திட்ட மாணவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பம்.
ஆரம்பம் :- 10/09/2010 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

"மயிலேறி வேலேந்தி வினை தீர்க்க வா!"
சிறி நதியா
நகை மாளிகை அன் டிஜிட்டல் கலரிலாப்
இல.1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP- 021 222 2709
இல.56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP- 021 222 6744
இல.108A, லிங்கன் பிளாசா கட்டடம்,
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
TP- 021 222 8412

"நல்லைக் கந்தனுக்கு அரோகரா"
ரூபா பன்முக வர்த்தகம்
தொ.பே: 021 222 8330
நிறுவன முதல்வர்கள்
க.செல்வரத்தினம், க.ராஜகுமாரன்
இல.104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

...சிறைமீட்ட தீரவேல்"
...லணியகம்
TP. No: 021 222 3152
...gents for Bata,
... - Hospital Road,

"நல்லைக் குமரனை தொழ நம் துயர் தீரும்"
கிருஷ்ணா நகை மாளிகை
இல.9, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 0212225046
கிருஷ்ணா அடைவுக் கடை
இல.370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

'வேலேந்தி மயிலேறி வினை தீர்க்க வா'
ஸ்ரீ வல்லிபுரா போட்டோ
T.P - 0212226596
இல.119, பருத்தித்துறை வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.

"அலங்காரக் கந்தனுக்கு அரோகரா"
கனகா பத்திரிகை விற்பனையகம்
இல.06, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

"யாமிருக்கப் பயமேன்"
லக்ஷ்மி ரேடர்ஸ்
TP- 021 222 2628
இல.316, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# இலங்கைத் தமிழர்களைத் தொடர்ந்தும் தடுத்து வைக்க வேண்டிய நிலை

## கனேடிய அரசு தெரிவிப்பு

எம்.வி.சன்.சீ கப்பலில் கடந்த 13 ஆம் திகதி கனடாவை வந்தடைந்த இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்புக் காரணங் களுக்காக தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்திருக்க வேண்டியுள்ளதாக கனேடிய அரசு தெரி வித்துள்ளது.

இவர்கள் மீது மூன்று கட்ட விசாரணைகள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் இவர்கள் இன்னமும் அடையாளம் காணப் படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே இவர்களை அது வரைக்கும் தடுப்புக் காவலில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டி இருக்கின்றது என்று நியாயம் கூறப் படுகின்றது. ஒரு வேளை இவர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னரும் கூட பாதுகாப்புக் காரணங்கள் என்கிற பெயரில் இவர்களில் ஒரு தொகையினரை கனேடிய அரசு தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்று இவர்களின் சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# 40 குதிரை வலு எஞ்சின்களுடன் கூடிய மீன்பிடிப்படகுகள் மீதான தடை நீக்கம்

(கொழும்பு)

நாற்பது குதிரைவலுவுடைய எஞ்சின்கள் பொருத்தப்பட்ட மீன்பிடிபடகுகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தொடர்பான காரணங்களை முன்வைத்து 40 குதிரைவலு எஞ்சின்களுடன் கூடிய மீன்பிடி படகுகளுக்கு முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடையை மீறிய கடற்றொழிலாளர்களுக்கு சொந்தமான 141 படகுகள் பாதுகாப்பு அமைச்சால் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. தடையை நீக்கி மீண்டும் படகுகளை தமக்கு வழங்குமாறு மீனவர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் அரசாங்கம் இந்தத் தடையை நீக்கியுள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரட்ன, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் நடத்திய கலந்துரையாடலை அடுத்து வடக்கு- கிழக்கு மாகாணங்களை சேர்ந்த மீனவர்களும் இத்தகைய படகுகளை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சு தலைமையிலான செயலணியை ஸ்தாபிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலணியில் கடற்றொழில் அமைச்சு கடற்படை கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இதில் அங்கம் வகிப்பர் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4)

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பி.ரி.ஐ பக்டீரியா சிறந்த பலனை தந்துள்ளது

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பி.ரி.ஐ. பக்டீரியா சிறந்த பெறுபேற்றை தந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் மலேரியா தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் நிறைவேற்று அதிகாரி வைத்தியர் எஸ்.பி. தினரகே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பி.ரி. ஐ.பக்டீரியா கடந்த மாதம் பாலேகொட பகுதியில் பரீட்சார்த்தமாக பாவனைக்கு விடப்பட்டது. இதன்போது அந்த குடம்பிகள் முற்றாக அழிவடைந்தமை அவதானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க மேலதிக பி.ரி.ஐ பக்டீரியாக்கள் அந்தப் பிரதேச பாவனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனிடையே இந்த உள்நாட்டு பி.ரி.ஐ. பக்டீரியாவின் ஆயுட்காலம் குறித்து பரிசோதனைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அந்த அறிக்கை அடுத்த வாரம் சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளதாகவும் வைத்தியர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில் கியூபாவிலிருந்து அடுத்த வாரம் பி.ரி. ஐ. பக்டீரியா இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-4)

# அரசியல் அமைப்பு திருத்தத்தை அனுமதிக்கப் போவதில்லை

## ஜனநாயக இடது சாரி முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேச அரசியலமைப்புத் திருத்தத்தையோ அல்லது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பினையோ எவ்விதத்திலும் அனுமதிக்கப் போவதில்லையென ஜனநாயக இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

இவற்றில் காணப்படும் அதிகார சுயரூபத்தைத் தமது கட்சி நிராகரிப்பதாக முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.


ஜனநாயக ரீதியிலான அரசியலமைப்பு ஒன்றை அங்கீகரிப்பதற்காகத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் கூறினார்.

இருப்பினும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னணியின் உறுப்பினர்கள் 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதென்று தீர்மானித்துள்ளதாக வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இதன் மூலம் எதிர்கட்சியின் அரச விரோத சக்திகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்கு எண்ணுவதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும், இந்த அரசியலமைப்புத் திருத்தத்தையோ அல்லது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பையோ அனுமதிக்கப் போவதில்லை யெனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று தீர்த்தோற்சவம்



படங்கள் -அரவிந்

## தீர்த்தமாடி அருள்வாய்

தீராப் பிணியறுக்கும் நல்லையில் தீர்த்தமாடு
திவ்விய நாதனே தீர்த்தமாடு
நல்லையில் ஆளும் நாயக ரூபா தீர்த்தமாடு
நாடியே வரும் உன்னடியார் வாழ்ந்திட தீர்த்தமாடு
பண்ணிய பாவ மெல்லாம் பனியாய் அகன்றிட தீர்த்தமாடு
பாரும் பசுமையாய் விளங்கிட தீர்த்தமாடு
நல்லூரின் நாயகனே நன்றாக தீர்த்தமாடு
நல்லவர் நனிசிறந்து நானிலம் தழைக்க தீர்த்தமாடு

எம்.ரூபன் , நாவற்குழி

## வேலனை வேண்டி நிற்போம்

தீர்த்த விழாக் காணவென
திரண்டு வந்த மக்களெல்லாம்
நேர்த்திக் கடனைச் செய்ய
மாவிளக்குத் தானெரிப்பர்
ஆர்த்த பிறவிக் கென்றும்
ஆதரவு தானளிக்கும்
கூர்த்த வடி வேலுடைய
வேலவனே வேண்டி நிற்போம்.

கவிமணி கந்த முருகேசதாசனார்

## தீர்த்தமாடிக் காட்சிதர வரும்வேளை

கலியுகத்தின் கனிந்த நிலைபோல் காட்சிகள்
கண்ணீரில் மனிதர்கள் இன்னல்தரு வன்செயல்கள்
அழிவுகள் அவலங்கள் அட்டூழியங்கள் எத்தனையோ
ஆயிரமாய் நிறைந்ததனை ஆறுமுகா அறிவாயே!
வழிபடும் பக்தர்கள் விடியற் காலையிலே
வரிசையாய் வருகின்றார் வடிவேலன் அருள் வேண்ட
களிப்போடு தீர்த்தமாடிக் காட்சிதர வரும்வேளை
கந்தாவுனை வேண்டுகின்றார் காட்டிடையா அமைதியென

குளப்பிட்டி. க.அருமைநாயகம்.

## தீர்ததமாடி வருகிறான் திருமுருகன்!

அஞ்சலென அபயந்தந்து
காத்திடவே தீர்த்தமாடி
இன்று திருமுருகன் வருகிறான்
தஞ்சமென வருமடியாரின்
வாழ்வு சாந்திபெற வெனவே
தீர்த்தமாடி இன்று
வேலன் வருகிறான்!
ஐந்து முகம் தோன்றில்
ஆறுமுகம் தோன்ற ;
பஞ்சம் பிணி யாவும்
பட்டெனப் பறந்தோட
குஞ்சரி சமேதரராக
குறிஞ்சிக் கடவுளான
நல்லைக் குமரன் வருகிறான்!

செ.ரவிசாந் வீரமனை, குப்பிளான்


நல்லூர்கந்தனே! தீர்த்தமாடி திக்கெட்டும் ஒளி தருவாய்

E.S.P.N.&CO

இல. 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3096
பக்ஸ்: 021 222 4394



# விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் உயர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் கடமையாற்றிய டாவூட் முஹமட் அஜ்மீர் என்ற உயர் உத்தியோகத்தருக்கு எதிராகவே இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கம்பஹா உயர் நீதிமன்றத்தில் குறித்த அதிகாரிக்கு எதிராக வழக்குத் தொடரப் பட்டுள்ளது. கொழும்பு இரகசிய பொலிசாரினால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

போர் நடைபெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு ஆதரவான செயற்பாடுகளில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஈடுபட்டதாகவும் கிராண்ட்பாசில் கைது செய்யப்பட்ட கனகலிங்கம் நிசாந்தன் என்ற விடுதலைப்புலிச் சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்வதற்குத் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் உதவிகளை வழங்கியதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

(ஶ்ரீ-2)

# இலங்கைத் தமிழர்களுடன் கனடாவை நோக்கிப் பயணிக்கும் புதிய கப்பல்

## கனேடிய செய்திகள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களுடன் கனடா நோக்கிப் புதிய கப்பல் ஒன்று புறப்பட்டு வந்து கொண்டிருப்பதாக கனேடிய தொலைகாட்சி ஒன்று நேற்று முன்தினம் இரவு தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுடன் கனடாவுக்கு வருகின்ற மூன்றாவது கப்பல் இதுவாகும் என்றும் இதை எதிர்கொள்கின்றமைக்கு கனேடிய அதிகாரிகள் தயார் படுத்தப்பட்டுள்ளதாகவும் இச்செய்தி தெரிவிக்கின்றது.

ஆயினும் பயங்கரவாத விவகாரங்கள் சம்பந்தப்பட்ட சர்வதேச நிபுணர்களில் ஒருவரான பேராசிரியர் ரொஹான் குணரட்ன இது குறித்த மாறுபட்ட தகவலை தெரிவித்துள்ளார்.


கனடாவுக்கு புறப்படுகின்றமைக்கு அனைத்து ஏற்பாடுகளுமே பூர்த்தியான நிலையில் தாய்லாந்தில் கப்பல் ஒன்றை எதிர்பார்த்து இலங்கைத் தமிழர்கள் ஒரு தொகையினர் காத்து நிற்கின்றனர். என்று அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கான சம்பளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் முல்லைத்தீவு வலய ஆசிரியர்களின் செப்ரெம்பர் மாதச் சம்பளப் பட்டியல் யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த ஆசிரியர்கள் எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் சமுகமளித்து அப்பட்டியலில் கையொப்பமிட்டு சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் மா. தேவேந்திரன் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)





க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். கல்வி வலய அதிபர்களுக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் உரையாற்றுவதையும் , அருகில் யாழ். கல்வி வலய கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.பி.மகேந்திரன் , யாழ். வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் யோ. ரவீந்திரன் மற்றும் யாழ். வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மீரா அருள்நேசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் , நிகழ்வில் கலந்து கொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:என்-குமார்.)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## எள்ளு

Botanical Name - Sesamum indicum
Family - Pedaliaceae
Engl - Gingelly
Sinh - Thala

இது உரோமங்களையுடைய நிமிர்வளர் சிறு செடியாகும். எதிரிலையமைவு முனையில் மாற்றிலையமைவு பற்கள் மடல்கள் அல்லது பிளவுபட்ட இலை விளிம்பை உடையது. தனிமலர்கள் நுனியில் அல்லது இலைக் கோணங்களில் அமைந்திருக்கும். சில சமயங்களில் மஞ்சள் குறியீடு கொண்டு மற்றும் சிறிய காம்பினைக் கொண்டது. புல்லி வட்டம் 5 பாகங்களை உடையது. மகரந்தத் தாள்கள் 4; அல்லி வட்டம் குழல் வடிவமானது. முட்கள் அற்றது. விதைகள் என்னற்றவை. முட்டை வடிவமானது. கருமை அல்லது வெண்மை நிறமுடையவை. மலர்களும் கனிகளும் வருடம் முழுவதும் இச் செடியில் உருவாக்கப்படும். மாசி, பங்குனி மாதங்களில் இச் செயற்பாடு இடம்பெறும்.

**பரம்பலும் இனவிருத்தியும்:**

முக்கியமாக வெப்பமான பகுதிகளில் எண்ணெய்ப் பயிராக பயிரிடப்படுகின்றது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருந்துவப் பயன்கள்:**

இதன் விதைகள் இலைகள் மற்றும் வேர்கள் மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

♦ ஒன்றிரண்டு பச்சை இலைகளை எடுத்து குளிர்ந்த நீரில் அலசினால் பசைத் தன்மை நீங்கும். இது புண்பட்ட கண்களைக் கழுவ உதவும்.

♦ 10 கிராம் இலைகளை 1200 மில்லி குளிர்ந்த நீரில் ஊறவிட்டு தினம் இரு வேளை 30 மில்லி அளவு எடுத்து 5 நாட்கள் பருக சீதநோய் குணமடையும்.

♦ இதன் இலைகளை நன்கு கழுவி அரைத்து கட்டிகளுக்கு கட்ட அவை சீக்கிரம் பழுத்து உடையும்.

♦ இதன் பூக்களை எடுத்து துப்புரவு செய்து குடிநீர் செய்து கண்ணோய் உள்ள கண்களைக் கழுவலாம்.




♦ இதன் காய்களை அதன் தோலுடன் சேர்த்து சுட்டு சாம்பலாக்கி அரித்து புண்களுக்கு தூவ புண்கள் ஆறும்.

♦ இதன் விதைகளை சுத்தம் செய்து பொடி செய்து 2 தொடக்கம் 4 கிராம் அளவு எடுத்து தேனுடன் கலந்து காலை மாலை ஆகிய நேரங்களில் 3 தொடக்கம் 5 நாட்கள் சாப்பிடக் கொடுக்க மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலி தீரும்.

இதன் விதைகளை 30 கிராம் எடுத்து 200 மில்லி நீரில் ஊறவைத்து பருக மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் உதிரச் சிக்கல் தீரும்.

குறிப்பு:-கர்ப்பிணித் தாய்மார்கள் முதல் 5 மாதங்களில் இதனைக் கூடுதலாக எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் கருச் சிதைவை ஏற்படுத்தலாம்.

ஆனால் கர்ப்பிணித்தாய்மார் 7 ஆம் மாதத்தின் பின் எள், பனங்கட்டி சேர்த்து துவைத்து 1,2 உருண்டைகள் வாரத்தில் 3 நாட்கள் சாப்பிடலாம். இதனால் இரத்த விருத்தி உண்டாவதுடன் மலச்சிக்கலும் தீரும்.

♦ மூலநோய் உள்ளவர்கள் விதையின் விழுது 5 கிராம் எடுத்து வெண்ணெய்யில் சாப்பிட குருதிவெளியேறல் குறையும்.

♦ விதையை அரைத்து கொதிக்க வைத்து கட்டிகளுக்கு கட்ட அவை பக்குவமடையும்.

♦ எள்ளைச் சேர்த்து பக்குவம் செய்த சோற்றை உண்டால் உடல் பலம் பெறும்.

♦ எள்ளில் இருந்து பெறப்படும் நல்லெண்ணெய்யை ஒரு மேசைக்கரண்டி அளவு தினம் எடுத்து குடித்தால் உடல் பூரிக்கும். தோல் வியாதிகள் வராமல் தடுக்கும்.

♦ நல்லெண்ணெய்யை (20 மில்லி) ஒரு முட்டை வெண்கருவுடன் கலந்து பருகினால் இருமல் தணியும்.

♦ நல்லெண்ணெய்யை முட்டை வெண்கருவுடன் சேர்த்து முகப்பருக்கள் மீது பூசி வர பருக்கள் மறையும்.

♦ தினமும் காலையில் எள்ளெண்ணெய்யை இரு கண்களிலும் 3 துளி வீதம் விட்டு தலையிலும் பூசி சுட்டாறிய வெந்நீரில் அடுத்தடுத்து 3 நாட்கள் தலை முழுகிவர கண் சிவப்பு,கண்வலி, கண்களில் இருந்து நீர் வடிதல், கண்கூசல், மண்டைக்குத்து ஆகிய நோய்கள் தீரும்.

♦ தீச்சுட்ட புண்களுக்கு முட்டை மஞ்சட் கருவுடன் நல்லெண்ணெய்யை கலந்து பூசலாம்.

♦ நல்லெண்ணெய் 500 மில்லிக்கு வட்டத்துத்தி வேர்ப்பட்டை 40 கிராம் சேர்த்து அடுப்பிலேற்றி சிறுதீயாக எரித்து வேர்ப்பட்டை சிவந்ததும் இறக்கி ஆறவிட்டுமுகப் பருக்களுக்கு பூச பருக்கள் முற்றாக நீங்குவதுடன் முகமும் பளபளப்பாக இருக்கும்.

♦ மஞ்சள் கையாந்தகரைச் சாறு 200 மில்லி மற்றும் நல்லெண்ணெய் 200 மில் லி கலந்து அடுப்பேற்றி சாறு வற்றியதும் இறக்கி ஆறவிட்டு அதனைப் பயன்படுத்தினால் முடி கருமையாகி நன்கு வளரும்.

♦ கரிசிலாங்கண்ணி, நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி தலைமுழுகி வந்தாலும் சகல பித்தரோகங்களும் நீங்கும்.

♦ எள்ளெண்ணெய்யும் சுண்ணாம்பு கலந்த நீரும் சமபாகத்தில் எடுத்து கலந்து வெந்த புண், ஆவிக்கொப்புளம் மற்றும் சீழ்ப்புண்களுக்குத் தடவலாம்.

♦ எள்ளெண்ணெய் மற்றும் சந்தன எண்ணெய் ஆகியவைகளைக் சம அளவாக கலந்து தலைவலிக்குத் தடவலாம்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# அரசின் அராஜகம் தொடர்கின்றது; வீதியில் இறங்கிப் போராடத் தயார்

## ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அன்று சர்வாதிகாரி என வர்ணித்தவர்கள் இன்று அவரின் செயற்பாடுகளையே பின்பற்றுகின்றார்கள். அதனை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவே 18 ஆவது திருத்தச் சட்டத்தை முன் வைக்க முனைகிறார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

எனவே கட்சி பேதங்களை மறந்து நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன் கருதி அபாயகரமான இந்தத்திட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென்றார். சட்டமும் ஒழுங்கும் இன்று சீர்குலைந்து போயுள்ள நிலையில் அரச உத்தியோகத்தர்கள் மரத்தில் கட்டி வைத்து தண்டிக்கப்படுகிறார்கள். இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முழு அரசியல் சீர்திருத்தத்தையும் மரத்தில் கட்டிவைத்து செயற்பட முனைகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ள உத்தேச அரசியல் சீர்திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக இடதுசாரிகள் கலைஞர்கள் மற்றும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்று ஜே. ஆர். ஜெயவர்த்தன கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்;

யுத்தத்தின் போது நாட்டின் எதிர்காலத்தையும் சுதந்திரத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதனை கருத்திற்கொண்டே இராணுவத்தினர் செயற்பட்டார்கள். அதற்கு பொது மக்களும் தமது ஒத்துழைப்பினை வழங்கினார்கள். ஆனால் யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் அந்த எதிர்பார்ப்புகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரத்தை மேலும் தக்க வைத்துக் கொண்டு சர்வாதிகார செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணமடைந்ததுள்ள போதிலும் அவருடைய செயற்பாடுகள் இன்னும் முற்றுப் பெறவில்லை. அதனையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுத்துச் செல்கிறார். அதாவது ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் பலப்படுத்திக்கொண்டு பாராளுமன்றத்தின் அதிகாரங்களையும் மக்களுடைய ஜனநாயக செயற்பாடுகளையும் சூனியமாக்கும் விதத்திலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

யுத்தத்தினை முடிவுக்குக்கொண்டுவரும் வரை முழுமூச்சுடன் செயற்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அது மாத்திரமல்லாமல் அவருடைய பட்டங்களும் பதக்கங்களும் பறிக்கப்பட்டுள்ளதுடன் அவருடைய ஓய்வூதியக் கொடுப்பனவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக அராஜக செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டுமென நாம் கூறியிருந்தோம்.

ஆனால் இன்று அந்த அதிகாரத்திலும் பார்க்க மேலும் பல பயங்கரமான அம்சங்களை உள்ளடக்கும் விதத்தில் உத்தேச அரசியல் சீர்திருத்தத் தினை முன் வைக்கிறார்கள்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக வீதியில் இறங்கிப் போராடவும் தயாராக இருக்கின்றோம் என்றார். (ஸ்ரீ-2)


# நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2010

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேசசபையினால் கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 09.09.2010 தொடக்கம் 23.09.2010 பி.ப. 3.00 மணிவரை
2. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி:- 23.09.2010 பி.ப.4.00 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி:- 24.09.2010 மு.ப.10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியகல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் , உள்ளூராட்சித் திணைக்களம்,யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

08.மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி | NBT | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோண்டாவில் அரசடி ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 3800.00 | 500.00 | 60.00 | 15.00 | M10/C11 |
| 2 | சின்னக்கொலணி குறுக்கு வீதி கல்லிட்டுத்தாரிடல் | 3850.00 | 500.00 | 60.00 | 15.00 | M10/C11 |
| 3 | கோண்டாவில் காரைக்கால் தோட்டவீதி கல்லிட்டுத்தாரிடல் | 10000.00 | 500.00 | 60.00 | 15.00 | M08/C09 |

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

திரு.மே.சாந்தசீலன் ,
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.
08.09.2010

(சி/1024)


## "ஞானச்சுடர்" வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப் படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் ஆவணி மாத மலர் வெளிவந்துள்ளது.

இச்சஞ்சிகை திருவிளக்கு வழிபாடு, சிவபெருமான் தூது,திருவிளையாடல், வேண்டுதல்கள்,கர்மமும் மறுபிறவியும் போன்ற பல ஆன்மீக விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (ஸ்ரீ-4)

## தேசிய மட்ட விஞ்ஞானபாட முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விவலயத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளிலும் க.பொ.த.(சாதாரண) மாணவர்களுக்கான தேசிய மட்ட விஞ்ஞான பாட முன்னோடிப் பரீட்சையானது நாளை வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரையும் தவறாது இப்பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## தேசிய மதப்பீடு தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய உதவிக்கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான தேசிய மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடல் இன்று புன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கந்துரையாடலில் அனைவரையும் தவறாதுகலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளா. (ஸ்ரீ-4)

ஊர் இரண்டுபட்டால்
கூத்தாடிக்கு கொண்டாட்டம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கை அரசு சீனாவை நம்பி இந்தியாவை கைகழுவுகிறது

இந்தியாவும் சீனாவும் பரம வைரிகள். அதே நேரம் இரண்டு நாடுகளும் உலகின் சர்வவல்லமை பொருந்திய நாடுகளாக நிலைமாற்றம் பெற்று வருகின்றன.

மூன்றாவது உலகப் போர் இடம்பெறுமாக இருந்தால், அது இந்தியாவுக்கும் சீனாவுக்குமான போரில் இருந்து ஆரம்பிப்பதாக அமையும். அந்தளவிற்கு இரண்டு நாடுகளினதும் எதிர்த்தன்மை அதிகரித்த வண்ணமுள்ளதுடன் உலகமும் அந்த இரண்டு நாடுகளின்பால் பிளவு பட்டிருப்பதைக் காணமுடியும்.

இந் நிலைமையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள இலங்கை அரசு முற்பட்டது.

விடுதலைப் புலிகள் மீதான யுத்தத்தில் இந்தியாவிடம் முழுமையான உதவிகளைப் பெற்று போரில் வெற்றி கொண்ட இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு, இந்தியாவின் வற்புறுத்தலில் இருந்து விடுபடுவதற்கும்,

இந்தியாவின் அச்சுறுத்தலை வெற்றி கொள்வதற்குமாக சீனாவை அதீதமாக ஆதரிக்கத் தொடங்கியது.

சீனாவை நாட்டிற்குள் ஊடுருவ விடுவதன் மூலம் இந்தியாவின் தடிப்பை மட்டுப்படுத்தவும் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை வழங்குமாறு இந்திய அரசு அழுத்தம் தருவதை எதிர்கொள்ளவும்

சீனாவை உறவாக்குவதே ஒரே வழியென இலங்கை அரசு முடிபு செய்தது. இத்தகையதொரு நிலைமையை இந்தியா உணர்வதற்கு சந்தர்ப்பம் இல்லை என்றே கூறவேண்டும்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு முடிபு கட்டவேண்டும் என்பது, காலஞ்சென்ற ராஜீவ் காந்தியின் மனைவி சோனியாவின் நிலைப்பாடாக இருந்தது.

மத்தியில் பலம் பெற்றிருக்கும்போது-தமிழகத்தில் தனது கூட்டணிக் கட்சியான தி.மு.க. ஆட்சி இருக்கும்போது விடுதலைப் புலிகளை முற்றாக அழித்துவிட வேண்டும் என்ற சிந்தனையைத் தவிர இலங்கை அரசு பற்றி எந்தவித சந்தேகமும் இந்தியாவிடம் இருக்கவில்லை.

இதன் காரணமாகவே யுத்தம் முடிந்த கையோடு இலங்கைக்கு வருகை தந்த மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு " எல்லாம் யாம் அறிவோம்" என்ற கர்ச்சிப்போடு கூறியிருந்தார்.

ஆனால் இப்போதுதான் இலங்கை அரசு சீனாவைத் தனக்கு துணையாக்கி தன்னை ஏமாற்றி விட்டது என்ற உண்மையை இந்தியா உணர்ந்து கொண்டது.

இதன் காரணமாகவே மக்களவையில் அமைச்சர் டி.ஆர்.பாலு இலங்கை அரசுக்கு எதிராக உரையாற்றியதும், வெளியுறவுச் செயலர் நிருபமா ராவின் இலங்கை விஜயமும் அமைந்தது எனலாம்.

எதுவாயினும் அண்டை நாடான இந்தியாவை ஏமாற்றுவதற்கு இலங்கை அரசு எடுக்கும் முயற்சியானது ஆபத்தானது என்பது மட்டுமல்ல-

இலங்கைக்கு அடி கொடுக்க இந்தியா நினைத்தால் அவ்விடத்தில் சீனா தலையிட்டு இலங்கையைக் காப்பாற்ற முற்படாதென்பதும் தெரிந்த உண்மை.

அவர்கள் எதிரிகளாக இருந்தாலும் மிகச் சிறிய நாடான இலங்கைக்காக, அந்த இரண்டு நாடுகளும் பகையை வேகப்படுத்த மாட்டா என்பதே உலக அனுபவமாகும்.

# வடக்கில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும்

## இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள அனைத்து மக்களும் அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட வேண்டும். மேலும் வடக்குக்கிழக்கில் சிவில் நிர்வாகம் படிப்படியாக முன்னேற்றம் அடையவேண்டும் என்பதுடன் பாதுகாப்பு நிலைமைகளின் முன்னேற்றத்துடன் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள காணிகளை விடுவிக்கும் பணிகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும் என்று இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் அருண ஏக்க நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே அருண ஏக்கநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் அமர்வு ஆரம்பமாகியது.

வடக்கில் இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் எஞ்சியுள்ள அனைத்து மக்களும் விரைவாக மீள் குடியேற்றப்படல் வேண்டும். அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேலைத்திட்டங்கள் அவசியமாகும்.

மக்கள் மீள் குடியேற்றப்படாமல் அங்கு வர்த்தக மற்றும் முதலீட்டு முயற்சிகளை எவ்வாறு மேற்கொள்வது? எனவே இடம்பெயர்ந்தோர் விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை சமயப்படுத்த வேண்டும். இது தொடர்பில் தற்போது வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றன.

பாதுகாப்பு நிலைமைகளின் முன்னேற்றங்களின் ஊடாக அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள காணிகளை விடுவிக்கும் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். அத்துடன் வடக்குக்கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக சிவில் நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும்.

காரணம் வடக்கு, கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்பவர்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளவாயாரிடம் அணுக வேண்டும் என்பது தொடர்பில் தெளிவு இருக்கவேண்டும். எனவே சிவில் நிர்வாகம் துரிதப்படுத்தப்படுவது அவசியம் என்று கருதுகின்றோம்.

இதேவேளை நாட்டில் நல்லாட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். எனவே தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்ற யோசனை முன்வைக்கின்றோம். முக்கியமாக இலஞ்சம் மற்றும் ஊழல் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்றார். (ச-5)

# 10 வருடங்களாக உறவினர்களை சந்திக்க முடியாதுள்ள சிறைக்கைதி

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அம்பலவாணர் ஜெகபாலன் என்பவர் கடந்த 10 வருடங்களாக தனது உறவினர்கள் எவரையும் சந்திக்க முடியுள்ளதாகவும் அவர்களைச் சந்திக்க அனுமதியளிக்க வேண்டும் என்று அவரது சட்டத்தரணிகள் மேல் நீதிமன்றத்தில் நேற்று கோரினர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சம்பவமொன்றின் சந்தேக நபராக கைது செய்யப்பட்டவராவார்.

இந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சம்பவம் கடந்த 1999ஆம் ஆண்டு ஜா-எல பகுதியில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டமொன்றின் போது நடத்தப்பட்டது. இந்த தாக்குதலின் போது பிரிகேடியர் லக்கி அலுகம கொல்லப்பட்டார்.

இந் நிலையில் குறித்த மனுதாரர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணியின் வாதத்தினை கருத்திற் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ சந்தேக நபரை தற்காலிகமாகவேனும் இரண்டு வாரக் காலப் பகுதிக்கு யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றும் சாத்தியம் குறித்து ஆராயும்படி அதிகாரிகளைப் பணித்தார். (ச-5)

# பிரபாகரனின் செயற்பாடுகளை ஜனாதிபதி மகிந்த முன்னெடுக்கிறார்

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அன்று சர்வாதிகாரி என வர்ணித்தவர்கள் இன்று அவரின் செயற்பாடுகளையே பின்பற்றுகிறார்கள். அதனை நிலைநிறுத்திக் கொள்வதற்காவே 18 வது திருத்தச் சட்டத்தை முன்வைக்க முனை கிறார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனவே கட்சி பேதங்களை மறந்து நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன் கருதி அபாயகரமான இந்த திட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சட்டமும் ஒழுங்கும் இன்று சீர்குலைந்து போயுள்ளன. அரச உத்தியோகத்தர்கள் மரத்தில் கட்டிவைத்து தண்டிக்கப்படுகிறார்கள். இந்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஷபக்ஷ முழு அரசியல் சீர்திருத்தத்தையும் மரத்தில் கட்டிவைத்து செயற்பட முனைகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள உத்தேச அரசியல் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக இடதுசாரிகள் கலைஞர்கள் மற்றும் பல கட்சிகளை சேர்ந்தவர்களும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்று ஜே.ஆர். ஜெயவர்த்தன கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. அதன் போதே அவர் இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

யுத்தத்தின் போது நாட்டின் எதிர்காலத்தையும் சுதந்திரத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதனைக் கருத்தில் கொண்டே இராணுவத்தினர் செயற்பட்டார்கள். அதற்கு பொது மக்களும் தமது ஒத்துழைப்பினை வழங்கினார்கள். ஆனால் யுத்தம் முடிபடைந்துள்ள போதிலும் அந்த எதிர்பார்ப்புக்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரத்தை மேலும் தக்கவைத்து கொண்டு சர்வதிகார செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணமடைந்துள்ளபோதிலும் அவருடைய செயற்பாடுகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. அதனையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுத்துச் செல்கிறார். அதாவது ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் பலப்படுத்திக் கொண்டு பாராளுமன்றத்தின் அதிகாரங்களையும் மக்களுடைய ஜனநாயக செயற்பாடுகளையும் சூனியமாக்கும் விதத்திலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவரும் வரை முழு மூச்சுடன் செயற்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அது மாத்திரமல்ல; அவருடைய பட்டங்களும் பதக்கங்களும் பறிக்கப்பட்டதுடன் அவருடைய ஓய்வூதியக் கொடுப்பனவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக அராஜக செயற்பாடுகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டும் என நாம் கூறியிருந்தோம். ஆனால் இன்று அந்த அதிகாரத்திலும் பார்க்க மேலும் பல பயங்கரமான அம்சங்களை உள்ளடக்கும் விதத்தில் உத்தேச அரசியல் சீர்திருத்தத்தினை முன்வைக்கிறார்கள்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக வீதியில் இறங்கிப் பேராடவும் தயாராக இருக்கிறோம் என்றார். (ச-5)

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



நீ நேர்மையுடன் இரு. தைரியமாக இரு. எந்த நெறியானாலும் அதை பக்தி சிரத்தையுடன் பின்பற்று. அப்போது நீ இறைவனை அடைவது உறுதி.

அனுபூதி என்பது இடையறாது சிந்தித்து அதை நம்மில் ஒரு பகுதியாகச் செய்து கொள்வதாகும்.

நம்மை நமது பணியாளர்களாகக் கடவுள் படைக்கவில்லை. நாமும் கடவுளுக்கு சமமானவர்கள் , நண்பர்கள் என்று தெரிந்து கொள்ளும்போது சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் நாம் அடைகிறோம். நித்தியமான பரம்பொருளிடமிருந்து இம்மியளவு நாம் விலகி இருக்கும் வரை அச்சம் நம்மைவிட்டு அகலாது.

# 4 உலகத் தலைவர்களின் உயிருக்கு ஆபத்து! நவம்பரில் மூன்றாம் உலகப்போர் மூளும்!

## பீதியைக் கிளப்பும் நாஸ்டர்டாமின் கணிப்பு



(பாரிஸ்)

14 ஆம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டில் வாழ்ந்தவர் நாஸ்டர்டாம். எதிர்காலத்தை பற்றி கணித்துக் கூறும் ஞானியான இவர் 5079 ஆம் ஆண்டு வரை உலகில் என்னென்ன நடக்கப் போகிறது என்று கணித்துக் கூறியுள் ளார்.

அவர் கணித்த படி முதல் உலகப் போர். 2 ஆம் உலகப் போர் மற்றும் பல்வேறு பூகம் பங்கள் , இயற்கை பேரழிவுகள் ஏற்பட்டு உள் ளன. சமீபத்தில் நடந்த இரட்டை கோபுரம் தகர் ப்பு, ரஷ்ய அணுசக்தி நீர் மூழ்கி கப்பல் மூழ் கியது போன்ற சம்பவங்களையும் அவர் கணித்து கூறி இருந்தார்.

இரும்புப் பறவைகள் மூலம் அமெரிக்கா வில் கட்டிடங்கள் இடிக்கப்படும் என்றார். அவர் சொன்னது போல விமானத்தை விட்டு மோதி இரட்டை கோபுரத்தை தகர்த்தனர். விமானத்தை தான் அவர் இரும்பு பறவை என்று கூறி இருந்தார்.

அதே போல குர்ஸ்க் தண்ணீரில் மூழ்கி போகிறது என்று கூறி இருந்தார். அவர் சொன்னது போல ரஷ்ய நீர் மூழ்கி கப்பல் குர்ஸ்க் கடலில் மூழ்கியது. தொடர்ந்து வரும் ஆண்டுகளில் நடக்கப் போவதாக அவர் கூறும் விடயங்கள் தான் நம்மை மிகவும் அச்சுறுத்தும் வகையில் இருக்கிறது.

இந்த ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் உலகப் போர் வெடிக்கப் போகிறது. இந்தப் போர் 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை நடக்கும். ஆரம்பத்தில் அணு குண்டுகள் மூலம் தாக்குதல் நடக்கும். அடுத்து இரசாயன ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடக்கும் என்று கூறியுள்ளார். இந்தப் போரில் ஐரோப்பாவில் பெரும் பகுதி அழிந்துவிடும். இரசாயனத் தாக்குதல் விளைவால் போருக்கு பின் மக்களுக்குத் தோல் புற்றுநோய் ஏற்பட்டு பெரும் பாதிப்பு வரும் என்று அவர் கூறி இருக்கிறார்.

நவம்பர் மாதத்துக்கு இன்னும் ஒரு மாதம் தான் இடைவெளி இருக்கிறது. அவர் கணித்தபடி போர் மூளுமா? இல்லையா? என்பது போகப் போகத்தான் தெரியும். அதே போல இந்த ஆண்டு இறுதிக்குள் உலக தலைவர்கள் 4 பேரைக் கொல்ல முயற்சி நடக்கும். இதில் அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார். அமெரிக்க அதிபர் ஒபாமா ரஷ்யப் பிரதமர் புதின் , ஜெர்மன் அதிபர் மார்கல் , இஸ்ரேல் அதிபர் பெஞ்சமின் , பிரான்சு அதிபர் சார் கோசி ஆகியோரில் இந்த 4 பேர் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. 2018 ஆம் ஆண்டு சீனா தான் உலகின் வல்லரசு நாடாக இருக் கும் என்றும் நாஸ்டர்டாம் கூறி இருக்கிறார்.

2033 தொடக்கம் 2045 வரை துருவ பகுதி பனிக்கட்டிகள் பெருமளவு உரு கும். இதனால் கடல் மட்டம் உயர்ந்து பல பகு திகள் அழியும் என்றும் அவர் கணித்துள்ளார்.

2046 தொடக்கம் 2070 க்குள் மருத் துவ உலகில் பெரும் புரட்சி ஏற்படும். மனித னின் எந்த உறுப்பையும் செயற்கையாக உருவாக்கி விடுவார்கள் என்றும் நாஸ்டர்டாம் சொல்லி இருக்கிறார். இப்படி 5079 ஆம் ஆண்டு வரை பல்வேறு விடயங்களைக் கணித்து கூறி இருக்கிறார். இறுதியாக 5079 ஆம் ஆண்டு உலகம் அழிந்து விடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பாகிஸ்தான் பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தல்

(பெஷாவர்)

வடமேற்கு பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் உள்ள பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அடையாளம் தெரியாத மர்ம நபர்க ளால் கடத்தப்பட்டதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜம்ருத் சாலையில் பேராசிரியர் குடியி ருப்பில் உள்ள தனது வீட்டிலிருந்து வெளியே வந்து பணிக்குச் செல்லும் போது இஸ்லா மிய கல்லூரிப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முகமது அஜ்மல் ஆயுதம் ஏந்திய கும்பலால் கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கோஹத் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான லூட்ஃபுல்லா காகஹேல் சமீபத்தில் வடமேற்கு மாகாணத்தில் துப் பாக்கி முனையில் கடத்தப்பட்டு பின்னர் அவரது குடும்பத்தினர் பெருமளவு பிணைத் தொகை கொடுத்ததையடுத்து ஆறு மாதங் களுக்குப் பிறகு அவர் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## நியூசிலாந்தில் ஏற்பட்ட பூகம்பத்தில் ஒரு இலட்சம் வீடுகள் இடிந்து தரைமட்டம்



(வெல்லிங்டன்)

நியூசிலாந்தின் 2 ஆவது மிகப் பெரிய நகரமான கிறிஸ்சர்ச்சில் கடந்த 3 ஆம் திகதி பூகம்பம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.1 ஆக இது பதிவாகி இருந்தது. இதனால் அங்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பூகம்பத்தில் ஒரு இலட்சம் வீடுகள் இடிந்து தரமட்டமானது. வீதிகளில் வெடிப்பு ஏற்பட்டு ஆங்காங்கே பிளவுகள் ஏற்பட்டுள் ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டன. 500 கட் டடங்கள் மிகவும் சேதமடைந்துள்ளன. இதில் சிக்கி 2 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். பூமியில் பல இடங்களில் 11 அடி ஆழத்துக்கு பள்ளம் ஏற்பட்டுள்ளது.

விளைநிலங்கள் சேதம் அடைந்துள்ளதுடன் ரூ.7 ஆயிரம் கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக நியூசிலாந்து பிரதமர் ஜான்கே தெரிவித்துள்ளார். கடந்த 80 ஆண்டுகளில் இல்லாத அளவு மிகப் பெரிய பேரிடர் நடந்துள்ளதாகவும் இதற்கிடையே பூகம்பம் ஏற்பட்ட கிறிஸ்ட் ச்ர்ச் மாகாணத்தில் நியூசிலாந்து அரசு அவசர நிலை பிரகடனம் செய்துள்ளதாகவும் இங்கு கொள்ளைகள் நடைபெறாமல் தடுக்க இராணுவ வீரர்கள் தீவிரமாக ரோந்து சுற்றி வருகின்றனர் என்றும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## சிலி சுரங்கத்தில் சிக்கியவர்களிடம் வீடியோ கொன்பரன்ஸ் மூலம் தொடர்பு

(சான்ஜோஸ்)

சிலி நாட்டில் கோபியாகோ அருகேயுள்ள சான்ஜோஸ் என்ற இடத்தில் சுரங்கங்கள் உள்ளன. அதில் உள்ள ஒரு சுரங்கம் கடந்த ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடிந்து சேத மடைந்தது.

எனவே, அங்கு பணியாற்றிக் கொண்டி ருந்த 33 தொழிலாளர்கள் வெளியே வர முடியாமல் சுரங்கத்திற்குள் சிக்கி கொண் டனர். எனவே, அவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்தச் சுரங்கம் பூமிக்கு அடியில் சுமார் பல மைல் ஆழத்தில் உள்ளது. எனவே, சுரங் கத்தின் மேல்பகுதியில் உள்ள பாறைகளின் மீது டிரில்லிங் எந்திரத்தின் மூலம் துளை போட்டு அதன் வழியாக வீடியோ கமராவை இறக்கி படம் பிடித்து பார்க்கப்பட்டது.

அப்போது சுரங்கத்திற்குள் சிக்கியுள்ள தொழிலாளர்கள் உயிருடன் இருப்பது தெரிய வந்தது. மேலும் அவர்கள் இன்னும் 4 மாதகாலம் உயிருடன் வாழ முடியும் என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே , ஏற்கனவே போடப்பட் டுள்ள ஆழ்துளையின் வழியாக மிகச் சிறிய அளவிலான திரை அனுப்பப்பட்டது. மேலும் பைப் ரோப்டிக் கேபிள் வழியாக உக்ரைன் நாட்டுக்கும் சிலி நாட்டுக்கும் இடையே நடந்த கால் பந்து போட்டி வெளியே இருந்து சுரங்கத்துக்குள் ஒளிபரப்பப்பட்டது.

அதை உள்ளே சிக்கியிருக்கும் தொழிலா ளர்கள் பார்த்து இரசித்தனர். இதே தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தொழிலாளர் களின் உறவினர்கள் அவர்களுடன் வீடியோ கொன்பரன்சிங் மூலம் தொடர்பு கொண்டு பேசி வருகின்றனர். இது தங்களுக்கு ஓரளவு ஆறுதல் அளிப்பதாக கூறினர். (ஸ்ரீ-2)

## பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 9 பொலிஸார் பலி



பாகிஸ்தானின் வட கிழக்கு மாகாணத்தில் லக்கி மார்வாத் பொலிஸ் நிலையத்தின் மீது நேற்று முன்தினம் வெடிகுண் டுகள் ஏற்றி வந்த காரை தீவிரவாதி மோதியதில் 9 பொலி ஸார் உட்பட 19 பேர் உயிரிழந்தனர். அதில் 4 பேர் பாட சாலை மாணவர்கள் ஆவர்.

மேலும் 40 பேர் படுகாயமடைந்து மோச மான நிலை யில் சிகிச்சை பெறுகின்றனர்.

இச்சம்பவத்தின் போது பொலிஸ் நிலை யத்தில் 40 முதல் 50 பொலிஸார் வரை இருந்துள் ள ன ர் . இன் னு ம் சில பொலி ஸார் கட்டட இடிபாடுக ளில் சிக்கி னர். பொ லிஸ் நிலையத் திற்கு அருகில் இருந்த பல கட்டடங்களுக்கும் சேதம் ஏற் பட்டுள்ளன. இந்த குண்டு வெடிப்புக்கு இது வரை எந்த தீவிரவாத அமைப்பும் உரிமை கோர வில்லை. குண்டு வெடித்தவுடன் அந்த பகுதி யைப் பாதுகாப்புப் படையினர் சுற்றி வளை த்தனர். (ஸ்ரீ-2)




## இரண்டாம் உலகப் போரில் போது குண்டு வீசப்பட்டதன் நேரடி வீடியோ ஒளிநாடா வெளியீடு

(லண்டன்)

இரண்டாம் உலகப்போரின் போது லண் டன் நகர் மீது குண்டு வீசப்பட்டதன் நேரடி வீடியோ ஒளி நாடா கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. இரண்டாம் உலகப் போர் 1940 களில் நடை பெற்றுக்கொண்டிருந்த போது லண்டனில் உள்ள பிளிட்ஸ் மற்றும் ஆக்ஸ் போர்ட் தெரு ஆகியவற்றின் மீது குண்டுகள் வீசப்பட்டன.

இந்த நிலையில் இரண்டாம் உலகப் போர் நடைபெற்றதன் 70ஆம் ஆண்டு பூர்த்தி விழா பிரிட்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் கவுன்சில் சார்பில் கொண்டாடப்பட்டது. அப்போது அரிய வகை வீடியோ ஒளிநாடாக்கள் வெளி யிடப்பட்டன. அதில் பிரிட்டனின் விமா னப்படைப் பிரிவில் பணியாற்றிய வீரர் ஒருவரின் வீட்டிலிருந்து திரைப்படம் எடுக்கும் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இதனை சோதனை செய்து பார்த்ததில் இரண்டாம் உலகப் போரின் போது குண்டு வீசப்பட்டதை நேரடியாக வண்ணப் படமாக எடுக்கப்பட்டது தெரியவந்தது. (ஸ்ரீ-2)



ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் அமெரிக்காவிற்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஒபாமாவின் உருவ பொம்மையையும் அந்நாட்டு கொடியையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்து எரித்து ஆர்ப்பாட்டத்திலீடுபடுவதை படத்தில் காணலாம்.

# ஐ.பி.எல். நான்காவது தொடரில் பஞ்சாப், ராஜஸ்தான் அணிகள் நீக்கம்?

(சென்னை)

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 4-வது இருபது-20 கிரிக்கெட் போட்டித் தொடரில் கிங்ஸ்லெவின் பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் ஆகிய அணிகளை நீக்குவதற்கு இந்தியக் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் போட்டி 2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

இதில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ், டில்லி டேர் டேவில்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்சாப் ஆகிய 8 அணிகள் பங்கேற்றன.

முதலாவது ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் இரண்டாவது தொடரில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மூன்றாவது தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் சம்பியனாகின.

நாலாவது ஐ.பி.எல். தொடர் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது. இது கூடுதலாக கொச்சி, புனே அணிகள் பங்கேற்கின்றன.

பத்து அணிகள் பங்கேற்பதால் 4-வது ஐ.பி.எல். போட்டிக்கான அமைப்பு முறையை மாற்றி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

பத்து அணிகளும் ஐ.பி.எல். போட்டியில் விளையாடுமா?என்ற சந்தேகம் எழுந்துள்ளது. கடந்த ஐ.பி.எல். போட்டியில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது.

இதில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் அந்நிய செலாவணி மோசடி செய்ததாக இரு அணிகளுமே தற்போது அமுலாக்கப் பிரிவு விசாரணையில் உள்ளன.

இதில் இரு அணிகளும் தவறான நடவடிக்கையில் ஈடுபட்டது நிரூபணமானது. இந்நிலையில் இரு அணிகளையும் இந்தியக் கிரிக்கெட் சபை ஐ.பி.எல். போட்டியில் இருந்து நீக்கலாம் என்று தகவல் வெளியாகியிருக்கின்றது.

# ஐ.பி.எல். தொடரில் சூதாட்டம் ஆஸி.பத்திரிகை திடுக்கிடும் தகவல்

(மெல்போர்ன்)

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) மூன்றாவது தொடரின்போது முன்னணி துடுப்பாட்ட வீரர் ஒருவரது நடவடிக்கை சந்தேகத்திற்கு இடமாக இருந்தது. இவர் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம் என அவுஸ்திரேலிய பத்திரிகை திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது.

லோர்ட்ஸ் டெஸ்டில் ஸ்பாட் பிக்சிங் சூதாட்டம் அம்பலமான பின் சர்வதேச அளவில் நடந்த பல மட்ச் பிக்சிங் செய்திகள் அவ்வப்போது வெளியாகிவருகிறது. பாகிஸ்தான் வீரர்கள் அடுத்து அவுஸ்ரேலிய வீரர்கள் என சுழன்ற இந்தப் புயல் பின் இலங்கையில் மையம் கொண்டது. தற்போது இந்தப்புயல் மூன்றாவது ஐ.பி.எல் தொடரை தாக்க ஆரம்பித்துள்ளது.

இரண்டு ஐ.பி.எல். நிர்வாகிகள் கூறியதாக தி அவுஸ்திரேலியன் என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில்,

மூன்றாவது ஐ.பி.எல். தொடரின்போது முன்னணி துடுப்பாட்ட வீரர் ஒருவர் வேண்டுமென்றே மோசமாக விளையாடினார். இவரது நடவடிக்கை மிகவும் சந்தேகத்துக்கு இடமாக இருந்தது.

எதிரணியினர் மோசமாகச் செயற்பட்டபோதும் கடைசி நேரத்தில் இவர் மிகவும் மந்தமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தார். இது எங்களை மிகவும் திகைக்கச் செய்தது.

தொடர்ந்து மோசமாக விளையாடிய அவர் ஆர்வமில்லாமல் செயற்பட்டார். இவரது மனம் எப்போதும் குழப்பமான நிலையில் இருப்பதுபோல இருந்தது.

இதில் ஏதோ சூழ்ச்சியுள்ளது என்றும் தவிர முன்னதாகக் களமிறங்கிய அவரது நடவடிக்கை குறித்து அணியின் உரிமையாளர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

ஆனால் இந்த வீரரின் பெயரை தெரிவிக்க முடியாது. ஏனெனில் இவரால் எங்களுக்கு இந்தியாவில் தொல்லை ஏற்படலாம். இந்த வீரரை ஐ.சி.சி. ஊழல் தடுப்புக் குழுவும் கண்காணித்து வந்தது. இவ்வாறு அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# யு.எஸ். ஓபன் டென்னிஸ் வீனஸ் காலிறுதிக்கு தகுதி



யு.எஸ். ஓபன் டென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றுப் போட்டியில் ஸ்பெயினின் நடால் வெற்றி பெற்றார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் தொடரான யு.எஸ். ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கின்றது.

இதன் பெண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், இஸ்ரேலின் ஷகர் பியருடன் மோதினார்.

டை பிரேக்கர் வரை சென்ற முதல் செற்றை 7:6 என வென்ற வீனஸ், அடுத்த சுற்றையும் 6:3 எனக் கைப்பற்றினார்.

பின் 7:6, 6:3 என்ற நேர் செற்களில் வென்ற வீனஸ் வில்லியம்ஸ் காலிறுதிக்கு முன்னேறினார்.

**இவானோவிச் ஏமாற்றம்**

மற்றொரு பெண்கள் ஒற்றையர் போட்டியில் சர்பியாவின் இவானோவிச் நடப்பு சம்பியன் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்சை எதிர்கொண்டார்.

இதில் 6:2, 6:1 என எளிதாக வென்ற கிளைஸ்டர்ஸ் காலிறுதிக்குத் தகுதி பெற்றார். பிற போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர், இத்தாலியின் ஷியாவோனோ ஆகியோர் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தனர்.

**நடால் அபாரம்**

ஆண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றுப் போட்டியில் உலகின் நம்பர்-1 வீரர் ஸ்பெயினின் நடால், பிரான்ஸின் ஜைல்ஸ் சிமோனை எதிர்கொண்டார்.

இதன் முதல் இரண்டு செற்றை 6:4, 6:4 என நடால் கைப்பற்றினார். தொடர்ந்து அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால் மூன்றாவது செற்றையும் 6:2 என எளிதாக வென்றார்.

முடிவில் 6:4, 6:4, 6:2 என்ற நேர் செற்களில் வென்ற நடால், நான்காவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

**முர்ரே அதிர்ச்சி**

மற்றொரு ஆண்கள் ஒற்றையர் போட்டியில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே, சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்காவிடம் 7:6, 6:7, 3:6, 3:6 என்ற செற் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார்.

மற்றைய போட்டிகளில் அமெரிக்காவின் சாம் குயர்ரே, ஸ்பெயினின் வெர்டாஸ்கோ, ஸ்பெயினின் ராபிரட்டோ, டேவிட் பெரர் ஆகியோர் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

## தொலைக்காட்சி விளம்பரம் டெண்டுல்கரை விஞ்சிய தோனி

(மும்பை)

இந்தியக் கிரிக்கெட் வீரர்களும் ஹிந்தி நடிகர், நடிகைகளும் விளம்பரம் மூலம் கோடிக் கணக்கில் பணம் சம்பாதிக்கின்றார்கள்.

கடந்த சில ஆண்டுகள் வரை கிரிக்கெட் வீரர்களில் டெண்டுல்கர்தான் விளம்பரம் மூலம் அதிக பணம் சம்பாதித்து வந்தார். அவரை இந்திய அணித் தலைவர் தோனி முந்தினார்.

கடந்த ஜூலை மாதம் அவர் ரூபாய் 210 கோடிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தமாகி புதிய சாதனை படைத்தார்.

2006 ஆம் ஆண்டு டெண்டுல்கர் 3 ஆண்டுக்கு ரூபாய் 180 கோடிக்கு ஒப்பந்தமாகி இருந்ததே மிகப் பெரிய ஒப்பந்தமாகக் கருதப்பட்டது.

தற்போது தொலைக்காட்சியில் வரும் விளம்பரங்களில் தோனிதான் முதலிடத்தில் உள்ளார். அவர் சாருக்கான், ஐஸ்வர்யாராய், டெண்டுல்கரை முந்தியுள்ளார்.

கடந்த ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையில் தோனிக்குத் தொலைக்காட்சியில் 24 விளம்பரக் கம்பனிகள் உள்ளன. ஆனால் டெண்டுல்கர், சாருக்கானுக்கு 16 விளம்பரக் கம்பனிகளே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கால்பந்தாட்டத்தில் விருப்பம்-போல்ட்

(ஜமெக்கா)

உலகின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரர் உசைன் போல்ட் கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்க விரும்புவதாக அறிவித்துள்ளார்.

இரண்டாவது விளையாட்டுத் துறையாகக் கால்பந்தாட்டப் போட்டிகளில் ஈடுபட விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தொழில்சார் ரீதியில் கால்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடுவதே தமது விருப்பம். கால்பந்தாட்டப் போட்டிகளில் சிறந்த திறமையை வெளிப்படுத்த முடியும்.

மான்செஸ்டர் யுனைடட் கழகத்தின் தீவிர ரசிகர் நான். இன்னும் இரண்டு ஆண்டுகளில் சிறந்த அல்லது சராசரியான ஓர் கழகத்தின் சார்பில் தொழில்சார் கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்பதற்கு விரும்புகின்றேன்.

கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய சமயத்தில் பயிற்றுவிப்பாளரின் ஆலோசனைப்படி தடகளப் போட்டிகளில் பங்குபற்றினேன் என உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

ஜமெக்காவைச் சேர்ந்த உசைன் போல்ட் 100 மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் உலக சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# என்னைச் சிக்க வைத்து விட்டனர் யசிர் ஹமீட் புதிய தகவல்

(லண்டன்)

பாகிஸ்தான் வீராகள் குறித்து யாருக்கும் நான் பேட்டி தரவில்லை. இதில் என்னை திட்டமிட்டு சிக்கவைத்துள்ளனர். தவிர மிரட்டவும் செய்தனர்எனயசிர்ஹமீட்புதியதகவலைவெளியிட்டுள்ளார்.

தி நியூஸ் ஒப் தி வேர்ல்ட் என்ற இங்கிலாந்துப் பத்திரிகை பாகிஸ்தான் வீரர்களுக்கும் சூதாட்டத்திற்கும் உள்ள தொடர்பு குறித்து இரண்டாவது வீடியோவை வெளியிட்டது. இதில் ஆரம்ப வீரர் யசிர் ஹமீட் பாகிஸ்தான் வீரர்கள் பெரும்பாலும் அனைத்துப் போட்டியிலும் சூதாட்டத்தில் ஈடுபடுவார்கள் என அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டார்.

ஆனால் உடனடியாக இதை மறுத்த யசிர் ஹமீட் இங்கிலாந்தின் தி நியூஸ் ஒப் தி வேர்ல்ட் பத்திரிகை எனக்கு எதிராக முற்றிலும் தவறான செய்தியை வெளியிட்டுள்ளது என பல்ட்டி அடித்தார்.

இந்நிலையில் இது குறித்து ஹமீட் கூறியதாவது,

கடந்த ஓகஸ்ட் 30 ஆம் திகதி நண்பருடன் நோட்டிங்காமில் உள்ள ஹோட்டலுக்கு சென்றேன். அப்போது அபித் கான் என்பவர் எத்தியாட் விமான நிறுவனத்தின் ஸ்பொன்சர் குறித்து கூறினார்.

பின் தொடர்ந்து பேசினேன். துடுப்பிற்கு பின்புறம் ஒட்டப்படும் ஸ்டிக்கர் விளம்பர ஒப்பந்தத்திற்காக 35 இலட்சம் ரூபாய் வரை தர முன்வந்தார். வேறு சில விளம்பரம் குறித்தும் கூறினார்.

இதில் ஆர்வமுள்ள உமர் குல், உமர் அக்மல், அப்ரிடி மற்றும் பவத் அலாம் ஆகியோரின் பெயர்களை தெரிவித்தேன். பின் உமர் குல்லிடம் தொலைபேசியில் தெரிவிக்க அவரும் ஒப்பந்தம் குறித்து தொடர்ந்தும் பேசுமாறு கூறினார்.பின் லோர்ட்சில் டெஸ்டில் நடந்த சூதாட்டம் குறித்துப் பேசினோம். அப்போது பிடிபட்ட மூன்று வீரர்கள் குறித்து அவர்கள் கேட்ட கேள்விக்கு பத்திரிகையில் வந்ததை வைத்து பதில் அளித்தேன்.

**இரகசிய வீடியோ**

இரண்டு நாள் கழித்து நாங்கள் பேசியது முழுவதும் இரகசியமாக வீடியோ எடுக்கப்பட்டதாக எனக்கு 0786019876 என்ற எண்ணிலிருந்து எஸ். எம். எஸ். வந்ததுஇதை அறிந்ததும் அதிர்ச்சி அடைந்தேன்.

பின் பிடிபட்ட வீரர்கள் குறித்து பேட்டி தருமாறு கூற உடனடியாக மொபைலை வைத்து விட்டேன். இதன் பின் அவரிடம் இருந்து எனக்கு எந்த அழைப்பும் வரவில்லை. இதன் பின் தான் தி நியூஸ் ஒப் தி வேர்ல்ட் பத்திரிகை அந்த வீடியோவை வெளியிட்டது.

இவ்வாறு யசிர் ஹமீட் கூறினார்.

**ஹமீட்டை மிரட்டினர்**

இது குறித்துவிளக்கம் தருமாறு இங்கிலாந்தின் பாகிஸ்தான் தூதரக அதிகாரி வஜித் சம்சுல் ஹசன், ஹமீட்டுக்கு சம்மன் அனுப்பினார். இதன் பின் பி.சி.பி சட்ட ஆலோசகர் தபாஜுல் ரிஜ்வி கூறுகையில்,

வீரர்கள் குறித்து தவறாகக் கூற ஹமீட்டுக்கு பணம் தர முன்வந்துள்ளனர். தவிர இந்நிலையில் இருந்து மாறக்கூடாது என மிரட்டியுள்ளனர் என்றார்.



**எப்போது திருந்துவார்கள்?**

மிரட்டினர், பணம் தர முன்வந்தனர் என இப்போது கூறும் ஹமீட் மற்றும் ரிஜ்வி இருவரும் அபித் கான் சந்திப்புக் குறித்து ஏன் முன்னதாக கூறவில்லை என்பது தான் இப்போது எழும் கேள்வி. தவிர எட்டு நாட்களில் பாகிஸ்தான் வீரர்களுக்கும் சூதாட்டத்திற்கும் உள்ள தொடர்பு குறித்து இரண்டு வீடியோ வெளியாகிவிட்டது. ஆனாலும் தங்கள் வீரர்கள் அப்பாவிகள் தான் என பாகிஸ்தான் கூறிவருவது ஆச்சரியமாகவுள்ளது.

# 18ஆவது சட்டத்திருத்தத்...

இலங்கையில் ஒருவர் எத்தனை முறை ஜனாதிபதியாக வரலாம் என்பதற்கு தற்போது இருக்கின்ற கட்டுப்பாட்டை 18-வது அரசியலமைப்புத் திருத்தம் நீக்குவதுடன் ஜனாதிபதிக்கான அதிகாரத்தையும் அது பெருமளவு அதிகரிக்க உதவுகின்றது.

எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தலைநகர் கொழும்பில் இதற்கு எதிரான போராட்டங்களை நடத்தினாலும் அந்த அரசியலமைப்புத்திருத்தம் மேற் கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் பெரும்பாலும் திடமாக மேற்கொள்ளப்பட்டு விட்டதாகவே தெரிகின்றது.

அரசியலமைப்பின் 18-வது திருத்தம் என்று கூறப்படுகின்ற இந்த சர்ச்சைக்குரிய திருத்தத்திற்கு எதிராக நடக்கும் எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் இணைந்துகொண்டிருக்கிறார்கள்.

இது ஜனநாயகத்திற்கு விழுந்த ஒரு பெரிய அடி என்று அரசை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இது வாக்காளர்களுக்குள்ள தெரிவுகளை அதிகரிக்கிறது என்று ஜனாதிபதி கூறுகிறார்.

தற்போது இலங்கையில் ஒருவர் இரு தடவை மாத்திரமே ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட முடியும். அந்தக் கட்டுப்பாட்டை இந்தப் புதிய அரசியலமைப்புத் திருத்தம் நீக்குகின்றது. இதனால் மூன்றாவது தடவையாகவும் 2016 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும்.

அத்துடன் இது எவரது அதிகாரங்களை அதிகரித்து நாட்டின் அதியுயர் நீதிபதிகள், தேர்தல், மனித உரிமைகள் மற்றும் ஏனைய விவகாரங்களுக்கான ஆணையாளர்கள் ஆகியோரை எந்தவிதமான சட்டரீதியான தடைகளும் இன்றி அவர் நியமிக்கவும் வழி செய்கிறது.

இந்த சட்டத்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக பெருமளவு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் கவர்ந்திழுத்திருக்கிறது.

அவர்களில் ஒருவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த ரவூப் ஹக்கிம். இந்தச் சட்டமூலம் அவசரஅவசரமாகக் கொண்டுவரப்படுவது குறித்து தான் சங்கடமடைவதாக கூறுகின்ற அவர், ஆனால் தனது சமூகத்திற்கு அபிவிருத்தி பலாபலன்கள் கிடைக்கும் என்பதால் தான் அதற்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாகக் கூறுகிறார்.

இந்த அரசியலமைப்பு திருத்தச்சட்ட வாக்களிப்பை தாம் முற்றாகப் புறக்கணிக்கப் போவதாக முக்கிய எதிர்க்கட்சி கூறுகிறது. ஆகவே இன்று இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அரசாங்கம் பெறப்போவது உறுதியாகிறது.

இந்நிலையில் 18-வது அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இதனை நேற்று சபாநாயகர் அறிவித்தார். (ச-5)

# வலி. வடக்கு உயர்பாதுகாப்பு...

வடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பாக உயர் பாதுகாப்பு வலய முன்னரங்க பாதுகாப்பு வலயமாக முதல் 300 மீற்றர் பகுதியிலும் மீள் குடியேற்றம் அறிவிக்கப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பல முயற்சிகளை மேற்கொண்டும் அதற்கான ஆக்க பூர்வமான பதிலை படைத்தரப்பு வழங்க வில்லை என தெரிய வருகிறது.

அத்துடன் வலி. வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் ஆராய்வதற்கு அம் மக்கள் சார்பான பிரதிநிதிகள், யாழ். அரச அதிபர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஆகியோர் இணைந்து யாழ். கட்டளைத்தளபதியை சந்திப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இந் நிலையில் வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் மக்களை மீள் குடியமர்த்தல் தொடர்பில் யாழ். கட்டளைத்தளபதியிடம் கேட்கப் போவதாக அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீள்குடியமர்த்தும் பணி உடனடியாக சாத்தியமற்ற விடயம்.

இதற்கு பல்வேறு நடைமுறைகள் உள்ளது. அவை தற்போது முடங்கிப் போயுள்ளது. அத்துடன் பாதுகாப்பு அமைச்சு இதுவரை அனுமதிவழங்கவில்லைனயாழ். கட்டளைத்தளபதி மகிந்த கத்துருசிங்க தெரிவித்தார். (எ-5)

# அவசர...

ஒரு தனிப்பட்ட நபரை கைது செய்து சிறையில் அடைப்பதற்காக நேற்று அவசர காலச் சட்டம் நீடிக்கப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் நீடித்தால் பயங்கரவாதத் தடைச் சட்டம் மட்டும் போதுமானது.

இன்று நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துள்ளது என்றார். (ச-5)


நிழல் அல்ல; நிஜம்!

ஒரே வாரத்திலே

கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்! கரும் புள்ளிகள், முகச்சுருக்கம், உதடு கருமை நீக்கம், முடி உதிர்தல், முகப்பருக்களிற்கான சிகிச்சைகள்மற்றும் உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல். பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்.

WE CARE ALWAYS!

தொடர்பு :- 0777351954 0774011129

SANEYA BEAUTY PALACE 132, KACHCHERI NALLUR ROAD JAFFNA. (கிட்டுப்பூங்கா அருகில்) (2427)



COLLEGE OF CHEMISTRY

பழம்றோட், கந்தர்மடம்

A/L DAY CLASSES

ஆரம்பம் 09.09.2010 (வியா) (3.00 P.M)

DIAS B.Sc (Hons)spl in chem (2425)


# மரண அறிவித்தல்

## வேலாயுதம் அன்னம்மா



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் அன்னம்மா நேற்று 07.09.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் (வாச்சர்) அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் வேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ராசேந்திரம், புலேந்திரன், தேவராசா மற்றும் நேசம்மா, தேவி, தாவீதுராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினேஸ்வரி, தங்கராசா, வசந்தராஜா(சுவிஸ்), வசந்தகுமாரி, வனிதா, சாந்தினி (தெல்லிப்பழை வைத்தியசாலை), பாமா, நந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும் பஞ்சலிங்கம், செல்வமணி, சரோஜாதேவி (சுவிஸ்), சின்னத்துரை, முருகையா அருந்தவராசா, ராஜநீதன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 08.09.2010 புதன்கிழமை உரும்பிராய் வடக்கு மடத்தடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.30 மணியளவில் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
மடத்தடி.
021 790 0442
077 615 1962

தகவல் :-
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(2428)

# இலட்சக்கணா...

இதேவேளை பாற்காவடி, பறவைக்காவடி, தூக்குக்காவடி, கற்பூரச்சட்டி அடியடித்தல் மற்றும் அங்கபிரதட்சை என ஆயிரக்கணக்கான மக்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர்.

திருடர்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த பொலிஸார் சிவில் மற்றும் சீருடைகளில் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

குளிர்பான நிலையங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள், விற்பனை செய்யும் கடைகள் என்பவற்றில் மக்கள் வெள்ளம் அலை மோதியது.

தமது தங்க நகைகளை பறிகொடுத்த சிலர் அங்கங்கே கலங்கிய வண்ணம் இருந்தமையும் காணக்கூடியதாக இருந்தது.

அரச மற்றும் தனியார் ஊடகங்கள் நேரடி அஞ்சல் செய்த வண்ணம் இருந்தன. இதே வேளை காலை 9.00 மணிக்கு பச்சை சாத்தும் வைபவம் இடம் பெற்றது. (ச)


2011 A/L DAY CLASS

NEW SCIENCE HALL JAFFNA

Mon Tue Wed Thur Fri

- இரசாயனவியல் - க.சிவத்திரன், ந.மகேஸ்வரன்
- பௌதிகவியல் - கி.குகன், சொ.சோதிலிங்கம்
- உயிரியல் - த.கெங்காதரன் + பிரபல ஆசிரியர்
- இணைந்த கணிதம் - சோ.செந்தில்ராஜ், ப.செந்தில்நாதன்

மேற்படி 4 பாடங்களுக்குமான Theory வகுப்புக்களும் ஆரம்பமாக உள்ளன.

ஆரம்பம் : 09.09.2010
வியாழன் காலை 7 மணி (1026)



இன்னும் 4 நாட்களே உள்ளன விரையுங்கள் !

Mega

கொம்ப்யூட்டர் கல்விக்கான புலமைப்பரிசில் பரீட்சை

12.09.2010 (ஞாயிறு)

இலவச அனுமதிகள் அருகிலுள்ள கிளைகளில்

CSC-ASIAN COMPUTER EDUCATION (2412)



DHL WORLDWIDE EXPRESS

திருமுருகன் கொம் நெற்

உலக நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

DHL விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை DHL

நாட வேண்டிய முகவரி

259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

TCN EXPRESS 2B, Nelsan Place, Colombo -06

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
பிரதான வீதி, நெல்லியடி
5, திருநகர் வீதி, கிளிநொச்சி
44, மில் றோட், வவுனியா

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும் (C-1013)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.